اَلْهَدْيُ السَّوِيُّ فِي صَلَاةِ النَّبِيِّ ﷺ

அல்ஹத்யுஸ் ஸவிய்யு ஃபீ ஸலாத்தின் நபிய்யி ﷺ

நபியவர்களின் சரியான தொழுகை முறை

அறிஞர்கள் குழு

إن هدى الله هو الهدى
دار الهدى
DARUL HUDA
நிச்சயமாக (இஸ்லாமாகிய) அல்லாஹ்வின் நேர்வழியே உண்மையான நேர்வழி

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

اَلْهَدْيُ السَّوِيُّ فِي صَلَاةِ النَّبِيِّ ﷺ

அல்ஹத்யுஸ் ஸவிய்யு ஃபீ ஸலாத்தின் நபிய்யி ﷺ

நபியவர்களின் சரியான தொழுகை முறை

அரபியில்

அறிஞர்கள் குழு - பஹ்ரைன்.

தமிழில்

ஆலிம் **அர்ஷத் அலி** சித்தாரி M.A., M.Phil.,
இப்னுல் கத்தாப் இஸ்லாமிய அழைப்பு மையம்,
பஹ்ரைன்.

மேலாய்வு

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்
குர்ஆன், சுன்னா பணியாளர்.

إن هدى الله هو الهدى
دار الهدى
DARUL HUDA

About This Book

Name of the Book	: அல்ஹத்யுஸ் ஸவிய்யு ஃபீ ஸலாத்தின் நபிய்யி ﷺ
Name in English	: Alhadyus Sawiyyu fee Salatin Nabiyyi ﷺ
Subject	: நபியவர்களின் சரியான தொழுகை முறை The Right Method of Prophet's Salah
Name in Arabic	: اَلْهَدْيُ السَّوِيُّ فِي صَلَاةِ النَّبِيِّ ﷺ
Translator	: ARSHAD ALI M.A., M.Phil.,
Reviewed by	: OMAR SHERIFF ABDUS SALAM
Language	: Tamil
Edition	: 1st, June 2020.
Total Pages	: 88
Copies	: 2000
Ref. No.	: DH-TML 2062
Printed by	: Patel Graphics, Chennai - 6.

HADIYAH: RS. 60/-

Published by:

DARUL HUDA
QUALITY ISLAMIC BOOK PUBLISHERS
211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-1.
Phone :+91-44-25247866, | darulhuda.chennai@gmail.com
Mobile : +91-98401 74121 | www.darulhuda.net

பொருளடக்கம்

தாருல் ஹுதா
அறிமுகம்

எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

இஸ்லாமியச் சகோதர சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

தாருல் ஹுதா அறிமுகத்தின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் தாருல் ஹுதாவின் நோக்கத்தையும் அதன் பணிகளையும் விவரிப்பதுடன் அதன் இன்றைய தேவையையும் தங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்: "இறை நம்பிக்கையுடைய ஆண்களும், இறை நம்பிக்கையுடைய பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கின்றனர். அவர்கள், (ஒருவர் மற்றவரை) நன்மை செய்யும்படித் தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையைக் கடைப்பிடித்து, (மார்க்க வரி) ஜகாத்து கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பார்கள். இத்தகையோருக்கு வெகு விரைவில் அல்லாஹ் அருள்புரிவான்..."

(அல்குர்ஆன் 9:71)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்: (நம்பிக்கையாளர்களே!)

உங்களில் ஒரு கூட்டத்தார் மனிதர்களைச் சிறந்ததின் பக்கம் அழைத்து, நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களில் இருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கட்டும். இத்தகையவர்கள்தாம் வெற்றியாளர்கள். (அல்குர்ஆன் 3:104)

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: உங்களில் யாராவது ஒரு தவறைக் கண்டால் அதை தனது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால் தனது நாவால் மாற்றட்டும். அதுவும் இயலாவிட்டால் உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்). இது ஈமானின் குறைந்தபட்ச அளவாகும். (ஸஹீஹுல் புகாரி)

மேலும் நபி ﷺ கூறுகிறார்கள்: இறைநம்பிக்கையாளர்கள் தங்களிடையே நேசங்கொள்வதற்கும், கருணை காட்டுவதற்கும், அன்பு செலுத்துவதற்கும் உதாரணம் ஓர் உடலைப் போல! உடலில் ஏதேனும் ஓர் உறுப்பு பாதிக்கப்பட்டால் அனைத்து உறுப்புகளும் காய்ச்சல் மற்றும் தூக்கமின்மையால் முறையிடுகின்றன. **(ஸஹீஹுல் புகாரி)**

இன்று நமது சமுதாயத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை பெரும்பாலோர் சரியான மார்க்க ஞானத்திற்கும் முறையான வழிகாட்டலுக்கும் அதிகம் தேவையுள்ளவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனங்கள் மற்றும் நபி மொழிகளுக்கிணங்க சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவது மார்க்கக் கடமை என்பதை உணர்ந்து, அல்குர்ஆன் மற்றும் நபி வழியின் அடிப்படையில் அந்த உயர்ந்த பணியை நிறைவேற்றி இறைப்பொருத்தத்தை அடைய வேண்டும் என்ற தூய எண்ணத்தில் தொடங்கப்பட்டதுதான் **தாருல் ஹுதா.**

பணிகளும் தொண்டுகளும்:

அழைத்தல்:

இதுவே இஸ்லாமின் அடிப்படையாகும். உலகில் இப்பணி இறைத் தூதர்கள் வாயிலாக நிலை நிறுத்தப்பட்டது. இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பின் அவர்களுடைய சமுதாயத்தினர் அனைவரின் மீதும் இப்பணி கடமையாக்கப்பட்டது. மேன்மைமிகு குர்ஆனும், சிறப்புமிகு நபி மொழியும் இதன் அவசியத்தை நமக்கு வலியுறுத்துகின்றன. இதற்கிணங்க இயன்ற அளவு அனைத்து வழிகளிலும் மனித சமுதாயத்திற்கு இஸ்லாமை அறிமுகப்படுத்துவதும், அதன் உயர்வுகளை விளங்கச் செய்வதும் தாருல் ஹுதாவின் தலையாயப் பணியாகும்.

கற்பித்தல்:

இஸ்லாமை அறிய விரும்பும் சிறுவர்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழிகளை அவரவர் தகுதிக்கேற்ப கற்றுத் தருவது தாருல் ஹுதாவின் இரண்டாவது முக்கிய பணியாகும்.

நூல் வெளியிடுதல்:

மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழி இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பேரறிஞர்களால் அரபி மொழியில் எழுதப்பட்ட நூல்களை தமிழிலும் ஏனைய உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்து, அந்நூற்களைச் சலுகை விலையில் மக்களுக்கு வழங்குவது தாருல் ஹுதாவின் மூன்றாவது சிறப்புப் பணியாகும்.

உதவுதல்:

அல்லாஹு தஆலாவே அனைவரின் தேவைகள், துன்பங்கள் அனைத்தையும் நிவர்த்தி செய்பவன். மிகப்பெரிய வள்ளலாகிய அல்லாஹ் தன் சார்பாக உலகில் ஏழை, எளியோர், நலிந்தோர் ஆகியோரின் துயர் துடைக்கும் வள்ளல் பெருமக்களுக்கு பெரும் வெகுமதிகளை ஈருலகிலும் வழங்குவதாக வாக்களித்துள்ளான். பிறர் துன்பங்களில் பங்கெடுப்பது, பிறர் தேவைகளை நிறைவேற்ற இயன்ற வரை உதவுவது முஸ்லிம்களுடைய அடிப்படைப் பண்புகளாகும். இவ்வுன்னதப் பணிக்காக **பைத்துல்மால்** (பொது நிதி) ஏற்பாடு செய்து இரக்கச் சிந்தையும், மார்க்கப்பற்றும் கொண்ட வள்ளல் பெருமக்களிடமிருந்து கடமையான, உபரியான தர்மங்களைப் பெற்று தேவையுடையோருக்கு உதவுதல் தாருல் ஹுதாவின் நான்காவது பணியாகும்.

மேற்கூறிய பணிகளைத் தவிர, இஸ்லாம் முழுமையாக ஒவ்வொருவரின் வாழ்விலும் வரவேண்டும் என்பதற்காகவும், மனிதச் சமுதாயங்களுக்குள் நல்லுறவும், அன்பும், கருணையும், சமூக புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் இயன்றவரை அல்லாஹ்வுக்காக தொண்டாற்ற வேண்டும் என்பது தாருல் ஹுதாவின் குறிக்கோளாகும்.

இப்பணிகள் அனைத்தும் தொய்வின்றி தொடர்ந்து சிறப்பாக, திறம்பட நடைபெறவும், அவற்றை அல்லாஹ் அங்கீகரிக்கவும் தாங்கள் துஆ செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்வதுடன் தங்களால் இயன்றவரை இப்பணிகளில் பங்கு பெறவும் அழைக்கிறோம்.

பேராற்றலுடைய அல்லாஹ்விடமே உதவி தேடுகிறோம்! அவனையே முன்னோக்கி நிற்கிறோம்!!

உங்களால் முடிந்த உதவிகளை அல்லாஹ்வின் பொருத்தம் நாடி தந்துதவுங்கள்.

> ***நன்மையான காரியங்களில் எவற்றை நீங்கள் உங்களுக்காக (மரணம் வருவதற்கு) முன்னதாகவே செய்து கொள்கிறீர்களோ அவற்றை அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்ததாகவும், மகத்தான கூலியாகவும் பெற்றுக் கொள்வீர்கள். (அல்குர்ஆன் 73:20)***

அல்லாஹ் தங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

اَلْوُضُوءُ

உளூ

உளூ என்றால் அரபி மொழியில் வெளிச்சம், பிரகாசம் என்று பொருளாகும்.

மார்க்கத்தில் உளூ என்றால், அல்லாஹ்வும் அவனுடைய தூதர் ﷺ அவர்களும் கற்றுத்தந்த முறைப் பிரகாரம் ஒருவர் தனது உடலில் குறிப்பிட்ட உறுப்புக்களைத் தூய்மையான தண்ணீரைக் கொண்டு வணக்க வழிபாட்டுக்காக சுத்தம் செய்வதாகும்.

இதுவும் அல்லாஹ்விற்காக அடியான் செய்கின்ற ஒரு வணக்கமாகும்.


உளூவின் சிறப்புகள்

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ إِذَا تَوَضَّأَ الْعَبْدُ الْمُسْلِمُ أَوِ الْمُؤْمِنُ فَغَسَلَ وَجْهَهُ خَرَجَ مِنْ وَجْهِهِ كُلُّ خَطِيئَةٍ نَظَرَ إِلَيْهَا بِعَيْنَيْهِ مَعَ الْمَاءِ أَوْ مَعَ آخِرِ قَطْرِ الْمَاءِ فَإِذَا غَسَلَ يَدَيْهِ خَرَجَ مِنْ يَدَيْهِ كُلُّ خَطِيئَةٍ كَانَ بَطَشَتْهَا يَدَاهُ مَعَ الْمَاءِ أَوْ مَعَ آخِرِ قَطْرِ الْمَاءِ فَإِذَا غَسَلَ رِجْلَيْهِ خَرَجَتْ كُلُّ خَطِيئَةٍ مَشَتْهَا رِجْلَاهُ مَعَ الْمَاءِ أَوْ مَعَ آخِرِ قَطْرِ الْمَاءِ حَتَّىٰ يَخْرُجَ نَقِيًّا مِنَ الذُّنُوبِ

அபூ ஹுரைரா ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: ஒரு முஸ்லிமான அல்லது முஃமினான அடியார் உளூ செய்யும்போது முகத்தைக் கழுவினால், கண்களால் பார்த்துச் செய்த பாவங்கள் அனைத்தும் (முகத்தைக் கழுவிய) நீருடன் அல்லது நீரின் கடைசித் துளியுடன் முகத்திலிருந்து வெளியேறி விடுகின்றன. அவர் கைகளைக் கழுவும்போது கைகளால் செய்திருந்த பாவங்கள் அனைத்தும் (கைகளைக் கழுவிய) நீருடன் அல்லது நீரின் கடைசித் துளியுடன் வெளியேறி விடுகின்றன. அவர் கால்களைக் கழுவும்போது, கால்களால் நடந்து செய்த பாவங்கள் அனைத்தும் (கால்களைக் கழுவிய) நீருடன் அல்லது நீரின் கடைசித் துளியுடன் வெளியேறி விடுகின்றன. இறுதியில், அவர் பாவங்களிலிருந்து தூய்மை அடைந்தவராக (அந்த இடத்திலிருந்து) செல்கிறார்.[1]

----

1. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 412.



மணிக்கட்டு

படம் 1



படம் 2

وُضُوْءُ النَّبِيِّ ﷺ

நபி ﷺ அவர்களுடைய உளூ

1. اَلنِّيَّةُ நிய்யத் செய்தல்

நிய்யத் என்பது உளூ செய்யப் போகிறேன் என்று உள்ளத்தால் உறுதி கொள்வதாகும். நிய்யத் செய்வதற்குரிய இடம் உள்ளமாகும். நாவினால் சொல்வது கூடாது.

2. بسم الله பிஸ்மில்லாஹ்


பிறகு, உளூ செய்ய நிய்யத் செய்தவர் பிஸ்மில்லாஹ் (அல்லாஹ்வின் பெயரால் உளூ செய்ய ஆரம்பிக்கின்றேன்) என்று சொல்ல வேண்டும்.

3. غَسْلُ الْيَدَيْنِ إِلَى الرُّسْغَيْنِ இரண்டு கைகளையும் மணிக்கட்டு வரை கழுவுதல்

முதலில் வலது கையையும் பிறகு இடது கையையும் உள்ளங்கையிலிருந்து மணிக்கட்டு வரை கழுவ வேண்டும். (பார்க்க படம் 1)

4. اَلْمَضْمَضَةُ وَالْاِسْتِنْشَاقُ வாய் கொப்பளித்தல், மூக்கிற்கு தண்ணீர் செலுத்தி சுத்தம் செய்தல்


பிறகு, வலது உள்ளங்கையில் தண்ணீர் எடுத்து, அதை வாயிற்கும் மூக்கிற்கும் செலுத்தி வாய் கொப்பளித்தப் பிறகு மூக்கை இடது கையால் சுத்தம் செய்ய வேண்டும். (பார்க்க படம் 2)




படம் 3



படம் 4



படம் 5



படம் 5



படம் 6

5. غَسْلُ الْوَجْهِ முகம் கழுவுதல்.

பிறகு, முகத்தை முழுமையாக தண்ணீர் மூலம் கழுவ வேண்டும்.

முகம் கழுவக்கூடிய அளவு: நீளத்தால் முன்நெற்றி முடியிலிருந்து நாடிக்குழிவரைக்கும், அகலத்தால் ஒரு காதிலிருந்து மறு காதுவரைக்கும். (பார்க்க படம் 3)

6. غَسْلُ الْيَدَيْنِ إِلَى المِرْفَقَيْنِ இரு கைகளையும் முழங்கை உட்பட கழுவுதல்.

முதலில் வலது கையையும் பிறகு இடது கையையும் அதன் விரல்களிலிருந்து ஆரம்பித்து முழங்கை உட்பட கழுவ வேண்டும். (பார்க்க படம் 4)

7. مَسْحُ الرَّأْسِ وَالأُذُنِ தலையையும், காதையும் மஸ்ஹு செய்தல்

இரு கைகளையும் தலையின் முன்நெற்றி முடியிலிருந்து ஆரம்பித்து பிடரி வரைக்கும் கொண்டு சென்று மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே அவ்விரு கைகளையும் திரும்ப கொண்டு வர வேண்டும். பிறகு, ஆட்காட்டி விரலினால் காதின் உள்பகுதியையும், பெருவிரலினால் வெளிப்பகுதியையும் தடவ வேண்டும். (பார்க்க படம் 5)

8. غَسْلُ الرِّجْلَيْنِ إِلَى الْكَعْبَيْنِ இரண்டு கால்களையும் கரண்டைக்கால் வரை கழுவுதல்.

முதலில் வலது காலையும் பிறகு இடது காலையும் கழுவ வேண்டும். கரண்டைக்கால் என்பது முழங்காலுக்குக் கீழே உள்ள பகுதியை பாதத்துடன் இணைக்கக்கூடிய இடமாகும். (பார்க்க படம் 6)

9. أَدْعِيَةٌ بَعْدَ الْوُضُوءِ உளூ செய்தபின் ஓதவேண்டிய பிரார்த்தனை.

உளூ செய்தபின் நபி ﷺ அவர்கள் ஓதிய பிரார்த்தனையை ஓதுவது சுன்னாவாகும்.

உமர் இப்னு அல் கத்தாப் ؓ அவர்கள் அல்லாஹ்வின் தூதர்

ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: உங்களில் ஒருவர் முழுமையான முறையில் உளூ செய்துவிட்டு,

أَشْهَدُ أَن لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை துணை யாரும் இல்லை என்று நான் உறுதிமொழிகிறேன். மேலும், முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் உறுதிமொழிகிறேன்.

என்று கூறினால், சொர்க்கத்தின் எட்டு வாசல்களும் அவருக்காகத் திறக்கப்படுகின்றன. அவற்றில் அவர் நாடிய வாசலில் நுழைந்து கொள்ளலாம்.[2]

அபூ ஸயீத் அல் குத்ரீ رضي الله عنه அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: யார் உளூ செய்த பிறகு,

سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ

பொருள்: யா அல்லாஹ் உன் புகழைக் கொண்டு உன்னைத் தூய்மைப் படுத்துகின்றேன். வணங்குவதற்கு தகுதியானவன் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. உன்னிடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன், உன்பக்கமே நான் மீள்கிறேன்.

என்று கூறுவாரோ, இவை ஒரு துண்டில் எழுதப்பட்டு அதில் முத்திரையிடப்படும், மறுமை நாள் வரைக்கும் அது உடைக்கப்படட மாட்டாது.[3]

----

2. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 397.
3. ஆதாரம்: முஃஜம் அவ்ஸத் -இமாம் தபரானி رحمه الله, எண் 1455.

أُمُوْرٌ وَاجِبَةٌ وَمَسْنُونَةٌ فِي الْوُضُوءِ

உளூவில் பேணவேண்டிய கட்டாயமான, விரும்பத்தக்க காரியங்கள்

- **اَلتَّرْتِيْبُ வரிசை முறைப்படி ஒன்றன் பின் ஒன்றாக செய்தல்**

இது உளூவினுடைய வாஜிபு -கடமைகளில் ஒன்றாகும்.

உளூவின் செயல்களை ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக செய்வது அவசியமாகும். வரிசையில்லாமல் உறுப்புக்களை முன் பின்னாக கழுவுவது கூடாது.

- **اَلْمُوَالَاة தொடர்ச்சியாக செய்தல்**

இது உளூவினுடைய வாஜிபுகளில் ஒன்றாகும்.

நபி ﷺ அவர்கள் செய்து காட்டிய முறைப் பிரகாரம் உளூ செய்யும்போது இடைவெளி இல்லாமல் ஒரு செயலை செய்த பின் அடுத்த செயலை தொடர்ச்சியாக செய்ய வேண்டும்.

- உளூ செய்யும் போது உறுப்புக்களை ஒரு ஒரு தடவையாக கழுவுதல் அல்லது இரண்டு இரண்டு தடவையாக கழுவுதல் அல்லது மூன்று மூன்று தடவையாக கழுவுதல் வேண்டும்.

நபி ﷺ அவர்கள் உளூ செய்யும் போது உறுப்புக்களை ஒரு ஒரு தடவையாகவும் கழுவியுள்ளார்கள். இது (வாஜிப்) கட்டாயமாகும்.

இரண்டு இரண்டு தடவையாகவும், மூன்று மூன்று தடவையாகவும் கழுவியுள்ளார்கள்.

ஆனால் எல்லா நிலையிலும் தலை மற்றும் இரண்டு காதுகளுக்கும் ஒரு தடவை மட்டும்தான் மஸ்ஹ் செய்ய வேண்டும்.

- **اَلْبَدْءُ بِالْيَمِيْنِ வலப்புறத்திலிருந்து ஆரம்பித்தல்**

இது உளூவின் சுன்னத்துகளில் ஒன்றாகும்.

முதலில் வலது புறத்தில் உள்ள உறுப்பையும் பிறகு இடது புறத்தில் உள்ள உறுப்பையும் கழுவ வேண்டும். குறிப்பாக, இரண்டு கைகளையும் கால்களையும் கழுவும்போது இதை கவனிக்க வேண்டும்.

அனைத்து செயல்களையும் வலப்புறத்திலிருந்து ஆரம்பிப்பது நபி ﷺ அவர்களின் வழிமுறைகளில் உள்ளதாகும்.

- **اَلسِّوَاك மிஸ்வாக் - பல் துலக்குதல்**

இது உளூவின் சுன்னத்துகளில் ஒன்றாகும்.

உளூவின் போது நபி ﷺ அவர்கள் பல் துலக்குவார்கள். மேலும், அதற்கு ஆர்வமூட்டி இருக்கிறார்கள்.

اَلصَّلَاةُ

தொழுகை

தொழுகை இஸ்லாமின் கடமைகளில் ஷஹாதாவிற்கு அடுத்துள்ள இரண்டாவது கடமையாகும். அது மார்க்கத்தின் தூணாகவும், முஸ்லிமையும் காஃபிரையும் வேறுபடுத்திக் காட்டக்கூடியதாகவும் இருக்கின்றது.

அதன் சிறப்பு மற்றும் மகத்துவத்தின் காரணமாக அல்லாஹ் தனது நபி முஹம்மது ﷺ அவர்களுக்கு மிஃராஜ் (-விண்ணுலக) பயணத்தின் போது அதனை கடமையாக்கினான்.

தொழுகை உடலால் செய்யும் வணக்கங்களில் தலையாய வணக்கமாகும். மார்க்கம் அதனை பரிபூரணமான அழகிய முறையில் கற்றுத்தந்துள்ளது. அனைத்து இறைத்தூதர்களின் மார்க்க சட்டங்களில் தொழுகை மிகமுக்கிய கடமையாக இருந்தது.

தொழுகையின் சிறப்புகள்:

1. தொழுகை அடியானுக்கும் அவனுடைய இறைவனுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தக்கூடியதாகும்.

2. தொழுகை வணக்கங்களில் அல்லாஹ்விற்கு மிகப்பிரியமான வணக்கமாகும்.

عَنْ عَبْدِ اللهِ رضي الله عنه قَالَ سَأَلْتُ النَّبِيَّ ﷺ أَيُّ العَمَلِ أَحَبُّ إِلَى اللهِ

قَالَ الصَّلاَةُ عَلَىٰ وَقْتِهَا قَالَ ثُمَّ أَيٌّ قَالَ بِرُّ الوَالِدَيْنِ قَالَ ثُمَّ أَيٌّ قَالَ الجِهَادُ فِي سَبِيلِ اللهِ

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﵁ அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயல் எது? என்று நபி ﷺ அவர்களிடம் நான் கேட்டபோது, தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவதாகும் என்று பதில் கூறினார்கள். அதற்கு அடுத்து எது? என்றேன். பெற்றோருக்கு நன்மை செய்தல் என்றார்கள். அதற்கு அடுத்து எது? என்றேன். அல்லாஹ்வின் பாதையில் போர் புரிதல் என்றார்கள்.[4]

3. தொழுகை பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு காரணமாக உள்ளது.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّهُ سَمِعَ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ أَرَأَيْتُمْ لَوْ أَنَّ نَهَرًا بِبَابِ أَحَدِكُمْ يَغْتَسِلُ فِيهِ كُلَّ يَوْمٍ خَمْسًا مَا تَقُولُ ذَلِكَ يُبْقِي مِنْ دَرَنِهِ قَالُوا لاَ يُبْقِي مِنْ دَرَنِهِ شَيْئًا قَالَ فَذَلِكَ مِثْلُ الصَّلَوَاتِ الخَمْسِ يَمْحُو اللهُ بِهِ الخَطَايَا

அபூ ஹுரைரா ﵁ அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்.'உங்களில் ஒருவரின் வாசலில் ஆறு ஒன்று (ஓடிக் கொண்டு) இருக்கிறது. அதில் அவர் தினமும் ஐந்து முறை குளிக்கிறார். அவரின் மேனியிலுள்ள அழுக்குகளில் எதுவும் எஞ் சியிருக்குமா எனக் கூறுங்கள்' என்று தோழர்களிடம் நபி ﷺ அவர்கள் கேட்டார்கள். 'அவரின் அழுக்குகளில் சிறிதளவும் எஞ்சி இருக்காது' என நபித் தோழர்கள் கூறினர். அதற்கு நபி ﷺ அவர்கள் 'இது ஐவேளைத் தொழுகைகளின் உவமையாகும். இதன் மூலம் அல்லாஹ் பாவங்களை அகற்றுகிறான்' என்று கூறினார்கள்.[5]

---

4. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி : 527.
5. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி : 528.

4. தொழுகை சொர்க்கத்தில் நுழைவதற்கும் நரகத்திலிருந்து ஈடேற்றம் அடைவதற்கும் காரணமாக உள்ளது.

عَنْ أَبِي مُوسَىٰ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ مَنْ صَلَّى الْبَرْدَيْنِ دَخَلَ الْجَنَّةَ

அபூமூஸா ﷺ அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: 'பகலின் வெப்பம் குறைந்த இரண்டு நேரத் தொழுகைகளை (அதாவது, ஃபஜ்ர், அஸர் தொழுகைகளை முறையாகத்) தொழுகிறவர் சுவர்க்கத்தில் நுழைவார்'.[6]

5. தொழுகையின் மூலம் முஸ்லிம்கள் தங்களது மார்க்கம் மற்றும் உலக காரியங்களில் அல்லாஹ்வின் உதவியை பெறுகிறார்கள்.

﴿وَاسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلَاةِ وَإِنَّهَا لَكَبِيرَةٌ إِلَّا عَلَى الْخَاشِعِينَ﴾

மேலும் பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள்; எனினும், நிச்சயமாக இது உள்ளச்சம் உடையோர்களைத் தவிர மற்றவர்களுக்குப் பெரும் பாரமாக இருக்கும்.[7]

6. தொழுகை மனிதனை சுத்தப்படுத்துகின்றது. அருவருப்பான மானக்கேடான செயல்களை விட்டும் தடுக்கின்றது.

﴿وَأَقِمِ الصَّلَاةَ إِنَّ الصَّلَاةَ تَنْهَىٰ عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ﴾

தொழுகையைக் கடைப்பிடித்து வாருங்கள். நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான மற்றும் தீயசெயல்களை விட்டும் தடுக்கின்றது.[8]

---

6. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி : 574.

7. ஆதாரம்: சூரா அல் பகரா 2வது அத்தியாயம் 45வது வசனம்.

8. ஆதாரம்: சூரா அல் அன்கபூத் 29வது அத்தியாயம் 45வது வசனம்.

7. தொழுகை ஒரு முஸ்லிமை பயத்திலிருந்தும் திடுக்கத்தில் இருந்தும் பாதுகாக்கின்றது.

﴿إِنَّ الْإِنْسَانَ خُلِقَ هَلُوعًا ○ إِذَا مَسَّهُ الشَّرُّ جَزُوعًا ○ وَإِذَا مَسَّهُ الْخَيْرُ مَنُوعًا ○ إِلَّا الْمُصَلِّينَ ○ الَّذِينَ هُمْ عَلَىٰ صَلَاتِهِمْ دَائِمُونَ ○﴾

நிச்சயமாக மனிதன் பதற்றக்காரனாக படைக்கப்பட்டுள்ளான். அவனுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டால், (திடுக்கிட்டு) நடுங்கிவிடுகின்றான். அவனுக்கு ஒரு நன்மை ஏற்பட்டால் (அது பிறருக்கு கிடைக்காதவாறு) தடுத்துக் கொள்கிறான். (ஆனால்,) தொழுகையாளிகளைத் தவிர, அவர்கள் தங்கள் தொழுகையைத் தவறாது தொழுது வருவார்கள்.[9]

8. தொழுகை இறைவனின் பிரியத்தையும் அவன் நம்முடன் இருக்கும் நிலையையும் பெற்றுத் தருகிறது.

﴿وَقَالَ اللَّهُ إِنِّي مَعَكُمْ لَئِنْ أَقَمْتُمُ الصَّلَاةَ﴾

அல்லாஹ் கூறினான்: நிச்சயமாக நான் உங்களுடன் இருக்கின்றேன். நீங்கள் தொழுகையை(த் தவறாது) கடைப்பிடித்து வந்தால்...[10]

9. தொழுகை உள்ளத்திற்கு அமைதியையும் நிம்மதியையும் தருகிறது.

﴿أَلَا بِذِكْرِ اللَّهِ تَطْمَئِنُّ الْقُلُوبُ ○﴾

அறிந்து கொள்! அல்லாஹ்வை நினைவு கூர்வதால் இதயங்கள் அமைதி பெறுகின்றன.[11]

---

9. ஆதாரம்: சூரா அல் மஆரிஜ் 70வது அத்தியாயம் 19 முதல் 23 வரை வசனங்கள்.

10. ஆதாரம்: சூரா அல் மாயிதா 5வது அத்தியாயம் 12வது வசனம்.

11. ஆதாரம்: சூரா அர் ரஅது 13வது அத்தியாயம் 28வது வசனம்.

10. தொழுகை இம்மையிலும் மறுமையிலும் தொழுகையாளிக்கு கண் குளிர்ச்சியாக இருக்கின்றது.

عَنْ أَنَسٍ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ جُعِلَ قُرَّةُ عَيْنِي فِي الصَّلَاةِ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: எனது கண் குளிர்ச்சி தொழுகையில் ஆக்கப்பட்டுள்ளது.[12]

----

12. அறிவிப்பாளர்: அனஸ் ﵁, நூல்: நஸாஈ, எண் 3939,

DARUL HUDA

حُكْمُ مُنْكِرِ الصَّلَاةِ وَتَارِكِهَا

தொழுகையை மறுப்பவர் மற்றும் அதை விடுபவரின் சட்டம்

1. யார் (ஐந்து நேரத்) தொழுகை கடமை என்பதை மறுப்பாரோ அவர் காஃபிர் -இறை மறுப்பாளர் ஆவார்.

2. யார் அலட்சியமாக, சோம்பேறித்தனமாக தொழுகையை முற்றிலும் விட்டுவிடுவாரோ அவரிடம் பாவமன்னிப்புத் தேடி தொழுகையை ஆரம்பிக்குமாறு மூன்று நாட்கள் வரை உபதேசிக்கப்படும். அதன் பிறகும் அவர் பாவமன்னிப்புத் தேடி தொழுகையை ஆரம்பிக்கவில்லை என்றால் இறைமறுப்பாளராக அவர் தீர்ப்பளிக்கப்பட்டு இஸ்லாமிய ஷரீஆ சட்ட முறைப்படி அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

﴿فَإِنْ تَابُوا وَأَقَامُوا الصَّلَاةَ وَآتَوُا الزَّكَاةَ فَإِخْوَانُكُمْ فِي الدِّينِ﴾

அவர்கள் தவ்பா செய்து (மனந்திருந்தி, இணை வைப்பதிலிருந்து விலகி) தொழுகையைக் கடைப்பிடித்து, ஸகாத்தையும் (முறையாக) கொடுத்து வருவார்களானால், அவர்கள் உங்களுக்கு மார்க்கச் சகோதரர்கள் ஆவார்கள்.[13]

13. ஆதாரம்: சூரா அத்தவ்பா அத்தியாயம் 9, வசனம் 11.

عَنْ جَابِرٍ ﷺ قَالَ سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ إِنَّ بَيْنَ الرَّجُلِ وَبَيْنَ الشِّرْكِ وَالْكُفْرِ تَرْكَ الصَّلَاةِ

நபி ﷺ அவர்கள் கூற தான் கேட்டதாக ஜாபிர் ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நிச்சயமாக மனிதனுக்கும் இணைவைப்பு மற்றும் இறைமறுப்புக்குமிடையே தொழுகையை விடுவதுதான் (தடையாக இருக்கின்றது).[14]

عَنِ ابْنِ عَبَّاسٍ ﷺ قَالَ قَالَ النَّبِيُّ ﷺ مَنْ بَدَّلَ دِينَهُ فَاقْتُلُوهُ

நபி ﷺ அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் கூறினார்கள்: யார் மார்க்கத்தை மாற்றிக் கொள்வாரோ அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றுங்கள்![15]

3. சிலசமயம் தொழுது சிலசமயம் தொழுகையை விட்டு விடுபவர்.

இவர் இறைமறுப்பாளராக ஆகமாட்டார். எனினும், பெரும் குற்றத்தை செய்த பாவியாவார். அல்லாஹ்விற்கும் அவனுடைய தூதருக்கும் மாறுசெய்து தண்டனைக்குரியவராக இருக்கின்றார். எனவே, இவர் உடனடியாக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுவதும் தொழுகையை நிலைநாட்டுவதும் இவர் மீது கடமையாகும்.

தொழுகையை மறுப்பவர் அல்லது அதை விட்டவரின் மீது ஏற்படும் தொடர்ச்சியான பாதிப்புகள்

இவ்வுலகில் உயிர் வாழும் போது:

- இவருக்கு முஸ்லிமானப் பெண்ணை திருமணம் செய்து கொடுப்பது கூடாது.
- இவர் யாருக்கும் وَلِي -வலிஃ பாதுகாவலராக, பொறுப்பாளராக ஆகமுடியாது.

14. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 134.
15. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 3017, 6922.

- சமூகத்தில் இவருக்கு எந்த ஓர் உரிமையும் தகுதியும் மதிப்பும் கிடையாது.
- இவர் பெற்றோருக்கு அல்லது மற்ற உறவினர்களுக்கு வாரிசாக ஆகமுடியாது.
- இவர் அறுத்த பிராணியின் மாமிசத்தை உண்பது ஹறாம் -தடை செய்யப்பட்டதாகும்.
- இவர் மக்காவிலும் அதை சுற்றியுள்ள புனித பகுதிகளிலும் நுழைவது ஹறாம் தடைசெய்யப்பட்டதாகும். காரணம், இவர் தொழுகையை முற்றிலும் விட்டுவிட்டதால் அல்லது மறுத்து விட்டதால் இறை மறுப்பாளராக ஆகிவிட்டார்.

மரணத்திற்குப் பிறகு:

- இவரின் மய்யித்தை குளிப்பாட்டக் கூடாது.
- கஃபனிடக் கூடாது.
- இவருக்கு ஜனாஸா தொழுகை நடத்தக் கூடாது.
- முஸ்லிம்கள் அடக்கம் செய்யப்படும் மண்ணறையில் இவரை அடக்கம் செய்யக் கூடாது.
- இவருக்காக அல்லாஹ்வின் ரஹ்மத்தை வேண்டி துஆ செய்யக் கூடாது.
- இவருடைய சொத்துக்கு அவருடைய உறவினர்களில் யாரும் வாரிசாக முடியாது. இவருடைய சொத்து பைத்துல் மாலில் (பொது நிதியில்) சேர்க்கப்பட்டு விடும்.
- இவர் தொழுகையை முற்றிலுமாக விட்டுவிட்ட காரணத்தால் இறைமறுப்பாளராக ஆகிவிட்டார். ஆகவே, இவர் நரகத்தில் நிரந்தரமாக தங்கிவிடுவார்.

أَحْوَالُ النَّاسِ فِي أَدَاءِ الصَّلَاةِ

தொழுகையை நிறைவேற்றுவதில் மக்களின் நிலைமைகள்

1. தொழுகையை முற்றிலுமாக விட்டுவிட்டவர்

இவர் இஸ்லாமின் ஐந்து கடமைகளில் மிக முக்கியமான கடமையை விட்டுவிட்டதால் இறைமறுப்பாளராக ஆகிவிடுவார்.

ஆதாரம்:

عَنْ جَابِرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ إِنَّ بَيْنَ الرَّجُلِ وَبَيْنَ الشِّرْكِ وَالْكُفْرِ تَرْكَ الصَّلَاةِ

நபி ﷺ அவர்கள் கூற தான் கேட்டதாக ஜாபிர் رَضِيَ اللَّهُ عَنْهُ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நிச்சயமாக மனிதனுக்கும் இணைவைப்பு மற்றும் இறைமறுப்புக்குமிடையே தொழுகையை விடுவது தான் (தடையாக இருக்கின்றது).[16]

2. அனுமதிக்கப்பட்ட காரணமில்லாமல் தொழுகையை சேர்த்து தொழுபவர்

16. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 134.

இந்நிலை சில இளைஞர்களிடம் காணப்படுகிறது. சேர்த்து தொழுவதற்கான காரணம் இல்லாமல் இரண்டு நேரத் தொழுகைகளை ஒரே நேரத்தில் தொழுவது கூடாது.

3. அலட்சியமாக தொழுகையின் நேரம் சென்ற பிறகு தொழுகையை பிற்படுத்தி தொழுபவர்

இவ்வாறு தொழுகையை நிறைவேற்றுவது முற்றிலும் கூடாது. இவ்வாறு தொழுபவரை அல்லாஹ் பழிக்கின்றான்.

﴿فَخَلَفَ مِنْ بَعْدِهِمْ خَلْفٌ أَضَاعُوا الصَّلَاةَ
وَاتَّبَعُوا الشَّهَوَاتِ فَسَوْفَ يَلْقَوْنَ غَيًّا﴾

ஆனால், அவர்களுக்குப் பின் தோன்றிய பின்னோர்கள் தொழுகையை வீணாக்கினார்கள்; (மன)இச்சைகளைப் பின்பற்றினார்கள் அவர்கள் (மறுமையில் நரகத்தில்) அழிவை சந்திப்பார்கள்.[17]

இந்த வசனத்திற்கு இப்னு மஸ்வூத் ﵁ அவர்கள் விளக்கம் கூறுகின்றார்கள்: இந்த வசனத்தில் கூறப்பட்டவர்கள் முற்றிலுமாக தொழுகையை விடவில்லை. மாறாக, அதன் நேரத்தைப் பிற்படுத்தி தொழுதனர்.

4. தொடர்ச்சியாக இல்லாமல் சில சமயங்களில் மட்டும் தொழுகைகளை நிறைவேற்றுவது

இவ்வாறு செய்வது ஹராம் -தடைசெய்யப்பட்டதாகும். இவ்வாறு தொழுபவர் தண்டனைக்குரியவராவார். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿إِنَّ الصَّلَاةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِينَ كِتَابًا مَوْقُوتًا﴾

---

17. ஆதாரம்: சூரா மர்யம் 19வது அத்தியாயம் 59வது வசனம்.

நிச்சயமாக தொழுகை முஃமின்களுக்கு நேரம் குறிப்பிடப்பட்ட கடமையாக உள்ளது.[18]

5. தொழுகையை அதன் ஆரம்ப நேரத்திலேயே பேணுதலாக தொடர்ச்சியாக தொழுதல்

இவ்வாறு தொழுபவர் மார்க்கத்தில் நிலைத்திருக்கக்கூடிய உறுதிமிக்க முஃமின் நம்பிக்கையாளர் ஆவார்.

----

18. ஆதாரம்: சூரா அன்னிஸா 4வது அத்தியாயம் 103வது வசனம்.

كَيْفَ كَانَتْ صَلَاةُ رَسُولِ اللهِ ﷺ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் தொழுகை எப்படி இருந்தது?

நல்லொழுக்கமுள்ள முஃமின் தொழுகைக்கு வரும்போது அல்லாஹ்விற்கு முன்னால் நிற்கப் போகின்றேன் என்ற எண்ணத்துடன் வரவேண்டும். மன நிம்மதியடைந்த நிலையில், அல்லாஹ்வை பயந்த நிலையில், அவனின் கண்ணியத்தை உணர்ந்தவராக வரவேண்டும். அல்லாஹ்வை நேசித்தவராக, புகழ்ந்தவராக, அவனுக்குக் கட்டுப்பட்டவராக, அவனுக்கு நன்றி செலுத்துபவராக, அவனுக்கு முன் பணிந்தவராக வரவேண்டும். அவனல்லாத மற்ற விஷயங்கள் பக்கம் சிந்தனை செய்யாமல், மற்ற செயல்களில் ஈடுபடாமல் முழு மனதுடன் வரவேண்டும்.

தொழுகையை தொடங்குவதற்கு முன்பாக அதன் நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றி இருக்க வேண்டும். தொழும் போது அதன் ருக்னுகளையும்[19] வாஜிபுகளையும்[20] முழுமைபடுத்தி தொழ வேண்டும். நபி ﷺ அவர்களின் “என்னை எவ்வாறு நீங்கள் தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்” என்ற கூற்றிற்கு ஏற்ப

19. தொழுகைக்குள் செய்ய வேண்டிய மிக கட்டாயமான ஒரு செயலை ருக்னு என்று சொல்லப்படும். அதை விடுவதால் தொழுகை வீணாகிவிடும்.

20. தொழுகையில் செய்யவேண்டிய அவசியமான ஒரு செயலை வாஜிப் என்று சொல்லப்படும். அதை மறந்து விட்டுவிட்டால் தொழுகையின் இறுதியில் இரண்டு ஸஜ்தாக்கள் செய்வது போதுமாகிவிடும்.

அவர்கள் செய்ததாக, சொன்னதாக அறிவிக்கப்பட்ட சுன்னாக்களைக்[21] கொண்டு தனது தொழுகையை அழகுபடுத்தித் தொழ வேண்டும்.

عَنْ عُثْمَانَ ﵁ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ مَا مِنَ امْرِئٍ مُسْلِمٍ تَحْضُرُهُ صَلَاةٌ مَكْتُوبَةٌ فَيُحْسِنُ وُضُوءَهَا وَخُشُوعَهَا وَرُكُوعَهَا إِلَّا كَانَتْ كَفَّارَةً لِمَا قَبْلَهَا مِنَ الذُّنُوبِ مَا لَمْ يُؤْتِ كَبِيرَةً وَذٰلِكَ الدَّهْرَ كُلَّهُ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதை தான் கேட்டதாக உஸ்மான் ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முஸ்லிமான மனிதர் கடமையாக்கப்பட்ட ஒரு தொழுகை(யின் நேரம்) வந்ததும், அதற்காக அழகிய முறையில் உளூ செய்து சிறந்த உள்ளச்சத்துடன் அழகிய முறையில் அதன் ருகூஃகளைச் செய்து தொழுவாராயின், அந்தத் தொழுகை அவர் பெரும் பாவம் ஏதும் செய்யாமல் இருக்கும் போதெல்லாம் அதற்கு முந்தைய (சிறிய) பாவங்களுக்குப் பரிகாரமாக ஆகிவிடுகிறது; அவ்வாறான நிலை எல்லாக் காலத்திலும் (தொடர்ந்து கொண்டே இருக்கின்றது).[22]

سترة ஸுத்ரா -தடுப்பு வைத்தல் மற்றும் அதன் சட்டம்

நபி ﷺ அவர்கள் கட்டளையிட்டபடி தொழுபவர் அவருடைய தொழுகையை யாரும் முறித்துவிடாத விதத்தில் தனக்கு முன்னால் ஒரு தடுப்பை வைத்து அதை முன்னோக்கித் தொழுவது அவசியமாகும்.

அந்த ஸுத்ரா சுவராக அல்லது தூணாக அல்லது ஒரு ஜான் உயரமுள்ள ஒரு பொருளாக அல்லது அதற்கென்று செய்யப்பட்ட ஒரு தடுப்பாக இருக்கலாம்.

---

21. தொழுகையில் கவனமாக பேணவேண்டிய ஒழுக்கமான செயலுக்கு சுன்னா என்று கூறப்படும். அதைப் பேணி செய்வதால் தொழுகையின் நன்மை அதிகரிக்கும்.
22. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 387.



ஸுத்ரா தடுப்பு மாதிரி படம்

عَنْ أَبِيْ سَعِيْدٍ الْخُدْرِيِّ ﵁ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِذَا صَلَّى أَحَدُكُمْ فَلْيُصَلِّ إِلَىٰ سُتْرَةٍ وَلْيَدْنُ مِنْهَا وَلَا يَدَعْ أَحَدًا يَمُرُّ بَيْنَ يَدَيْهِ فَإِنْ جَاءَ أَحَدٌ يَمُرُّ فَلْيُقَاتِلْهُ فَإِنَّهُ شَيْطَانٌ

நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஸயீத் அல்குத்ரி ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உங்களில் ஒருவர் தொழுவதற்காக தயாரானால் அவர் ஒரு தடுப்பை முன்னோக்கித் தொழட்டும். அவர் அதை நெருங்கி நிற்கட்டும். அவர் தனக்கு முன்னால் யாரையும் நடந்து செல்ல விடவேண்டாம். அப்படி யாரேனும் நடந்து செல்ல முற்பட்டால் அவரை அவர் தடுக்கட்டும். ஏனென்றால், நிச்சயமாக அவர் ஷைத்தானாவார்.[23]

عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ ﵁ أَنَّ النَّبِيَّ ﷺ كَانَ يُرْكَزُ لَهُ الْحَرْبَةُ فَيُصَلِّي إِلَيْهَا

அப்துல்லாஹ் இப்னு உமர் ﵁ அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள் தொழுவதற்காக ஈட்டி நாட்டப்படும். அவர்கள் அதை நோக்கித் தொழுவார்கள்.[24]

---

23. ஆதாரம்: இப்னு மாஜா, எண் 954.

24. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 498.

தொழுபவரின் ஸஜ்தா செய்யும் இடத்திற்கும் சுத்ராவிற்கும் இடையே உள்ள இடைவெளி

عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ ﷺ قَالَ كَانَ بَيْنَ مُصَلَّى رَسُولِ اللهِ ﷺ وَبَيْنَ الجِدَارِ مَمَرُّ الشَّاةِ

ஸஹ்ல் இப்னு ஸஃது ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள் தொழுமிடத்துக்கும் சுவற்றுக்குமிடையே ஓர் ஆடு நடக்குமளவுக்கு இடைவெளி இருக்கும்.[25]

1. نِيَّة நிய்யத் செய்தல்

இது தொழுகையின் ருக்னுகளில் ஒன்றாகும்.

நிய்யத் என்பது தொழுகையை நிறைவேற்றப் போவதாக உள்ளத்தில் உறுதி கொள்வதாகும். நிய்யத் செய்யும் இடம் உள்ளமாகும். நாவினால் நிய்யத்தை மொழிவது கூடாது.

ஆதாரம்:

عَنْ عُمَرَ بْنِ الخَطَّابِ ﷺ عَنِ النَّبِي قَالَ ﷺ إِنَّمَا الْأَعْمَالُ بِالنِّيَّاتِ وَإِنَّمَا لِكُلِّ امْرِئٍ مَا نَوَىٰ

நபி ﷺ அவர்கள் கூறியதாக உமர் இப்னு கத்தாப் ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கிறது.[26]

2. قِيَام கியாம் -நிலைநிற்பது

இது தொழுகையின் ருக்னுகளில் ஒன்றாகும்.

தொழுகையாளி தொழ நினைக்கும்போது நேராக கிப்லாவை முன்னோக்கி நிற்க வேண்டும்.

---

25. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 496.
26. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 6689, 6953.



கியாம் நிலைநிற்பது

அல்லாஹ் கூறுகின்றான்:

﴿فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ وَحَيْثُ مَا كُنْتُمْ فَوَلُّوا وُجُوهَكُمْ شَطْرَهُ﴾

எனவே நீர் (தொழும்போது மக்காவிலுள்ள) 'மஸ்ஜிதுல் ஹராமி'ன் பக்கமாக உம்முடைய முகத்தைத் திருப்புவீராக! (விசுவாசிகளே) நீங்களும் எங்கிருப்பினும் (தொழுகைக்காக) அதன் பக்கமாக உங்களுடைய முகங்களைத் திருப்புவீர்களாக![27]

﴿وَقُومُوا لِلَّهِ قَانِتِينَ﴾

மேலும், (தொழுகையில்) அல்லாஹ்வுக்குப் பயந்து மிக்க உள்ளச்சத்தோடு நில்லுங்கள்.[28]

عَنْ أَبِي حُمَيْدٍ السَّاعِدِيِّ ﷺ فَقَالَ كَانَ رَسُولُ اللَّهِ ﷺ إِذَا قَامَ إِلَى الصَّلَاةِ اعْتَدَلَ قَائِمًا

அபூ ஹுமைத் அஸ்ஸாயிதிய்யி ؓ அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தொழுகைக்காக எழுந்து நின்றால் நேராக நிற்பார்கள்.[29]

3. تَكْبِيْرَةُ الْإِحْرَامْ தக்பீரதுல் இஹ்ராம்

இது தொழுகையின் ருக்னுகளில் ஒன்றாகும்.

தொழுபவர் اَللّٰهُ أَكْبَرْ அல்லாஹு அக்பர் என்று கூறி தொழுகையை ஆரம்பிக்க வேண்டும்.

---

27. ஆதாரம்: சூரா அல் பகரா 2வது அத்தியாயம் 144வது வசனம்.
28. ஆதாரம்: சூரா அல் பகரா 2வது அத்தியாயம் 238வது வசனம்.
29. ஆதாரம்: ஸுனன் இப்னு மாஜா, எண் 862.

தக்பீர் கூறும் போது கைகளை காதுகளின் ஓரங்கள் வரை அல்லது புஜங்கள் வரை உயர்த்த வேண்டும். அவ்வாறு உயர்த்துவதற்கு மூன்று முறைகள் உள்ளன. அவற்றில் எதை வேண்டுமானாலும் பின்பற்றலாம்.

முதலாவது: தக்பீர் சொல்லும் போது கைகளை உயர்த்தி பிறகு அவற்றை நெஞ்சில் கட்டுவது.

இரண்டாவது: தக்பீர் முதலில் கூறிவிட்டு பிறகு கைகளை உயர்த்திக் கட்டுவது.

மூன்றாவது: இரு கைகளை உயர்த்திக் கட்டிய பிறகு, தக்பீர் கூறுவது.

கைகளை உயர்த்தும்போது விரல்களை மடக்காமல் நீட்டி வைத்திருக்க வேண்டும். இரு உள்ளங்கைகள் கிப்லா திசையை முன்னோக்கி இருக்க வேண்டும்.



புஜம் வரை உயர்த்துவது



காதுவரை உயர்த்துவது

ஆதாரம்:

عَنْ عَلِـيِّ بْنِ أَبِي طَالِبٍ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مِفْتَاحُ الصَّلَاةِ الطُّهُورُ وَتَحْرِيمُهَا التَّكْبِيرُ وَتَحْلِيلُهَا التَّسْلِيمُ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அலீ இப்னு அபீ

தாலிப் ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: தொழுகையின் திறவுகோல் சுத்தம் (உளூ) ஆகும். (ஆகுமான செயல்களை தடை செய்யக் கூடியது) அதை ஆரம்பிப்பது தக்பீர் கூறுவதாகும். (தொழுகையின் போது தடை செய்யப்பட்ட செயல்களை ஆகுமாக்கி வைப்பது) அதை முடிப்பது ஸலாம் கூறுவதாகும்.[30]

عَنْ أَبِي حُمَيْدٍ السَّاعِدِيِّ رَضِيَ اللَّهُ عَنْهُ فَقَالَ كَانَ رَسُولُ اللهِ ﷺ إِذَا قَامَ إِلَى الصَّلَاةِ اعْتَدَلَ قَائِمًا وَرَفَعَ يَدَيْهِ حَتَّىٰ يُحَاذِيَ بِهِمَا مَنْكِبَيْهِ ثُمَّ قَالَ اَللّٰهُ أَكْبَرُ

அபூ ஹுமைத் அஸ்ஸாயிதிய்யி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தொழுகைக்காக எழுந்து நின்றால் நேராக (எந்த ஒரு பக்கமும் சாயாமல் சமமாக) நிற்பார்கள். பிறகு, இரு கைகளையும் தோள் புஜத்திற்கு நேராக உயர்த்துவார்கள். பின்பு, அல்லாஹு அக்பர் என்று கூறுவார்கள்.[31]

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ كَانَ رَسُولُ اللهِ ﷺ إِذَا قَامَ إِلَى الصَّلَاةِ رَفَعَ يَدَيْهِ مَدًّا

அபூ ஹுரைரா ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தொழுகைக்காக எழுந்து நின்றால் தங்களது இரு கைகளையும் (அதன் விரல்களை) நீட்டிய வண்ணமாக உயர்த்துவார்கள்.[32]

தொழுபவர் முதல் தக்பீரைத் தவிர மற்ற இடங்களில் தனது கைகளை உயர்த்த வேண்டுமா?

ஆம் தொழுபவர் முதல் தக்பீரைத் தவிர மற்ற சில இடங்களிலும் தனது கைகளை உயர்த்துவார். அவை:

ருகூஃ செல்வதற்கு முன்பாக "அல்லாஹு அக்பர்" என்று கூறியவராக தனது கைகளை உயர்த்துவார்.

---

30. ஆதாரம்: ஸுனன் அபூ தாவூது, எண் 61.
31. ஆதாரம்: ஸுனன் இப்னு மாஜா, எண் 862.
32. ஆதாரம்: ஸுனனுத் திர்மிதி, எண் 240.

ருகூஃவிலிருந்து எழுந்திருக்கும் சமயம் **سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ** ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ் என்று கூறியவராக தனது கைகளை உயர்த்துவார்.

முதல் அத்தஹிய்யாத்து ஓதியப் பின் மூன்றாவது ரக்அத்திற்காக எழுந்திருக்கும் போது “அல்லாஹு அக்பர்” என்று கூறியவராக தனது கைகளை உயர்த்துவார்.

ஆதாரம்:

عَنْ مَالِكِ بْنِ الْحُوَيْرِثِ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ كَانَ إِذَا كَبَّرَ رَفَعَ يَدَيْهِ حَتَّىٰ يُحَاذِيَ بِهِمَا أُذُنَيْهِ وَإِذَا رَكَعَ رَفَعَ يَدَيْهِ حَتَّىٰ يُحَاذِيَ بِهِمَا أُذُنَيْهِ وَإِذَا رَفَعَ رَأْسَهُ مِنَ الرُّكُوعِ فَقَالَ سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ فَعَلَ مِثْلَ ذَلِكَ

மாலிக் இப்னு அல்ஹுவைரிஸ் ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் (தொழுகையில் ஆரம்பத்) தக்பீர் சொல்லும்போதும், ருகூஉ செய்யும்போதும் தமது கைகளை தமது காதுகளுக்கு நேராக உயர்த்துவார்கள். ருகூஉவிலிருந்து தலையை உயர்த்தும் போது ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ் (அல்லாஹ் தன்னைப் புகழ்வோரை செவியேற்று விட்டான்) என்று கூறும்போதும் அதைப் போன்றே கைகளை உயர்த்துவார்கள்.[33]

عَنْ نَافِعٍ ﵀ أَنَّ ابْنَ عُمَرَ ﵄ كَانَ إِذَا دَخَلَ فِي الصَّلَاةِ كَبَّرَ وَرَفَعَ يَدَيْهِ وَإِذَا رَكَعَ رَفَعَ يَدَيْهِ وَإِذَا قَالَ سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ رَفَعَ يَدَيْهِ وَإِذَا قَامَ مِنَ الرَّكْعَتَيْنِ رَفَعَ يَدَيْهِ وَرَفَعَ ذَلِكَ ابْنُ عُمَرَ إِلَىٰ نَبِيِّ اللهِ ﷺ

நாபிஃவு ﵀ அறிவிக்கின்றார்கள்: இப்னு உமர் ﵄ அவர்கள் தொழுகையை ஆரம்பிக்கும் போது தக்பீர் கூறித் தம் கைகளை

33. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 642.

உயர்த்துவார்கள். ருகூவுக்குச் செல்லும் போதும் தம் கைகளை உயர்த்துவார்கள். 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்' எனக் கூறும் போதும் தம் கைகளை உயர்த்துவார்கள். இரண்டாம் ரக்அத் முடித்து எழும்போதும் தம் கைகளை உயர்த்துவார்கள். நபி ﷺ அவர்கள் இவ்வாறு செய்ததாக இப்னு உமர் ﵄ அவர்கள் குறிப்பிட்டார்கள்.[34]

4. وَضْعُ الْيَدِ الْيُمْنَىٰ عَلَى الْيُسْرَىٰ முதலில் இடது கையை நெஞ்சின் மீது வைத்து பிறகு அதன் மீது வலது கையை வைக்க வேண்டும்.



நிலையில் கை கட்டும் முறை ஒன்று

அதன் செய்முறை: தொழுபவர் ஆரம்ப தக்பீர் கூறிய பின் தனது வலது உள்ளங்கையை இடது உள்ளங்கையின் மேல் பகுதி, மணிகட்டு, முன் கை இவற்றின் மீது வைப்பார்.

34. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 739.



நிலையில் கை கட்டும் முறை இரண்டு

அல்லது வலது கையால் இடது கையைப் பிடித்து தனது நெஞ்சின் மீது வைப்பார்.



நிலையில் கை கட்டும் முறை மூன்று

அல்லது வலது கையை இடது குடங்கையின் மீது பிடிக்காமல் வைப்பார்.

ஆதாரம்:

عَنْ وَائِلِ بْنِ حُجْرٍ رضي الله عنه أَنَّهُ رَأَى النَّبِيَّ ﷺ رَفَعَ يَدَيْهِ حِينَ دَخَلَ فِي الصَّلَاةِ

كَبَّرَ وَصَفَ هَمَّامٌ حِيَالَ أُذُنَيْهِ ثُمَّ الْتَحَفَ بِثَوْبِهِ ثُمَّ وَضَعَ يَدَهُ الْيُمْنَىٰ عَلَى الْيُسْرَىٰ فَلَمَّا أَرَادَ أَنْ يَرْكَعَ أَخْرَجَ يَدَيْهِ مِنَ الثَّوْبِ ثُمَّ رَفَعَهُمَا ثُمَّ كَبَّرَ فَرَكَعَ فَلَمَّا قَالَ سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهُ رَفَعَ يَدَيْهِ فَلَمَّا سَجَدَ سَجَدَ بَيْنَ كَفَّيْهِ

வாயில் இப்னு ஹுஜ்ர் ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள் தொழுகையை ஆரம்பித்தபோது தமது கைகளை உயர்த்தித் தக்பீர் கூறியதை நான் பார்த்தேன்.

இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான ஹம்மாம் ﵁ அவர்கள் இரு காதுகளுக்கு நேராக என்று விவரித்துள்ளார்கள்.

பின்னர் தமது ஆடையால் (இரு கைகளையும்) மூடி, இடது கையின் மீது வலது கையை வைத்தார்கள். அவர்கள் ருகூஉச் செய்ய விரும்பியபோது தம் கைகளை ஆடையிலிருந்து வெளியே எடுத்துப் பின்னர் அவற்றை உயர்த்தித் தக்பீர் கூறி ருகூவு செய்தார்கள். (ருகூவிலிருந்து தலையை உயர்த்தும்போது) ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ் என்று கூறுகையில் தமது கைகளை உயர்த்தினார்கள். பிறகு, ஸஜ்தாச் செய்யும்போது தமது உள்ளங்கைகளுக்கிடையே ஸஜ்தாச் செய்தார்கள்.[35]

عَنْ وَائِلِ بْنِ حُجْرٍ ﵁ قَالَ لَأَنْظُرَنَّ إِلَىٰ صَلَاةِ رَسُولِ اللهِ ﷺ كَيْفَ يُصَلِّي فَنَظَرْتُ إِلَيْهِ فَقَامَ فَكَبَّرَ وَرَفَعَ يَدَيْهِ حَتَّىٰ حَاذَتَا بِأُذُنَيْهِ ثُمَّ وَضَعَ يَدَهُ الْيُمْنَىٰ عَلَىٰ كَفِّهِ الْيُسْرَىٰ وَالرُّسْغِ وَالسَّاعِدِ

வாயில் இப்னு ஹுஜ்ர் ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எப்படி தொழுவார்கள் என்பதை நான் பார்ப்பேன் (என்று எனக்குள் கூறிக்கொண்டு நான் ரஸூலுல்லாஹ்விடம் சென்றேன்). அப்போது, அவர்களை நான்

35. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 671.

DARUL HUDA

பார்த்தேன், அவர்கள் தொழுகைக்காக நிற்கும் போது தக்பீர் கூறி இரு கைகளையும் தனது இரு காதுகளுக்கு நேராக வரும் வரை உயர்த்தினார்கள். பிறகு, தனது வலது கையை இடது உள்ளங்கையின் மேல் பகுதி, மணிகட்டு, முன் கையின் மீது வைத்தார்கள்.[36]

5. دُعَاءُ الْإِسْتِفْتَاحِ துஆ இஸ்திஃப்தாஹ் (ஆரம்ப துஆ)

தொழுபவர் நெஞ்சின் மீது தனது வலது கையை இடது கையின் மேல் வைத்தப் பின் ஆரம்ப துஆவை ஓதத் துவங்குவார்.

ஆதாரம்:

عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﵁ قَالَ كَانَ رَسُولُ اللهِ ﷺ يَسْكُتُ بَيْنَ التَّكْبِيرِ وَبَيْنَ الْقِرَاءَةِ إِسْكَاتَةً قَالَ أَحْسِبُهُ قَالَ هُنَيَّةً فَقُلْتُ بِأَبِي وَأُمِّي يَا رَسُولَ اللهِ ﷺ إِسْكَاتُكَ بَيْنَ التَّكْبِيرِ وَالْقِرَاءَةِ مَا تَقُولُ؟ قَالَ أَقُولُ اَللّٰهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ اللّٰهُمَّ نَقِّنِي مِنَ الْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الْأَبْيَضُ مِنَ الدَّنَسِ اللّٰهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ

அபூ ஹுரைரா ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள் தக்பீருக்கும் கிராஅத்துக்கும் இடையே சற்று நேரம் மவுனமாக இருப்பார்கள். இறைத்தூதர் அவர்களே! என் தந்தையும் தாயும் தங்களுக்கு அர்ப்பணம். தக்பீருக்கும் கிராஅத்துக்குமிடையே நீங்கள் மவுனமாக இருக்கும் சமயத்தில் என்ன கூறுவீர்கள்? என்று கேட்டேன்.

اَللّٰهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ

36. ஆதாரம்: ஸுனன் நஸாயி, எண் 889.

اَللّٰهُمَّ نَقِّنِي مِنَ الخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ اَللّٰهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالبَرَدِ

பொருள்: ‘இறைவா! கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையே நீ ஏற்படுத்திய தூரத்தைப் போல், எனக்கும் என் தவறுகளுக்குமிடையே நீ தூரத்தை ஏற்படுத்துவாயாக! இறைவா! வெண்மையான ஆடை அழுக்கிலிருந்து தூய்மைப் படுத்தப்படுவது போல் தவறுகளைவிட்டும் என்னைத் தூய்மைப்படுத்துவாயாக! தண்ணீராலும் பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளைக் கழுவுவாயாக!

என்று நான் கூறுவேன்’ என்றார்கள்.[37]

----

37. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 744.

أَدْعِيَةُ الْاِسْتِفْتَاحِ

ஆரம்பத்தில் ஓதப்படும் துஆக்கள்

துஆவுல் இஸ்திஃப்தாஹ் ஓதும்போது மேற்கூறிய துஆக்களைத் தவிர வேறு சில துஆக்களும் நபிமொழிகளில் காணப்படுகின்றன. அவற்றில் எதை வேண்டுமானாலும் ஓதலாம். ஆனால் ஒரு முறையில் ஒரு துஆவை மட்டுமே ஓதவேண்டும்.

سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالَىٰ جَدُّكَ وَلَا إِلٰهَ غَيْرُكَ

பொருள்: அல்லாஹ்வே! உன்னை புகழ்ந்து உன்னை நான் தூய்மைப்படுத்துகின்றேன்.[38] உன் பெயர் மிக்க பாக்கியம் மிக்கது. உன் கண்ணியம் உயர்ந்துவிட்டது. வணக்கத்திற்கு தகுதியான இறைவன் உன்னைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை.[39]

اَللّٰهُ أَكْبَرُ كَبِيرًا وَالْحَمْدُ لِلّٰهِ كَثِيرًا وَسُبْحَانَ اللّٰهِ بُكْرَةً وَأَصِيْلًا

பொருள்: அல்லாஹ் மிக மிகப் பெரியவன். அல்லாஹ்விற்கே அதிகமதிகம் புகழ் உரியது. காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வை நான் தூய்மைப்படுத்துகின்றேன்.[40]

---

38. உன்னைத் தூய்மைப்படுத்துகின்றேன் என்பதின் அர்த்தம்: இணைவைப்பாளர்கள் உனக்கு மகன், மகள், மனைவி, நிகர் உண்டு என்பதாக அவர்கள் உன் மீது இட்டுக்கட்டும் அபாண்டமான வார்த்தைகளிலிருந்து உன்னை நான் தூய்மைப் படுத்துகின்றேன்.

39. ஆதாரம்: ஸுனன் அபூ தாவூது, எண் 775.

40. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 601.

اَلْحَمْدُ لِلّٰهِ حَمْدًا كَثِيرًا طَيِّبًا مُبَارَكًا فِيهِ

பொருள்: அதிகமான தூய்மையான வளமிக்க புகழ் அனைத்தும் அல்லாஹ்விற்கே உரியது.[41]

6. اَلْاِسْتِعَاذَة ஷைத்தானை விட்டும் பாதுகாப்புத் தேடுதல்

தொழுபவர் துஆ இஸ்திஃப்தாஹ் ஓதியப் பின்,

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அவூது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம்

பொருள்: அல்லாஹ்விடம் விரட்டடப்பட்ட ஷைத்தானை விட்டும் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அல்லது,

أَعُوذُ بِاللّٰهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ مِنْ هَمْزِهِ وَنَفْخِهِ وَنَفْثِهِ

அவூது பில்லாஹிஸ் ஸமீயில் அலீமி மினஷ் ஷைத்தானிர் ரஜீமி மின் ஹம்ஸிஹி வ நஃப்கிஹி வ நஃப்ஸிஹி

பொருள்: மிகக் கேட்கக்கூடியவனான மிக அறிந்தவனான அல்லாஹ்விடம் விரட்டடப்பட்ட ஷைத்தானை விட்டும் அவனுடைய வீண் ஊசலாட்டத்தை விட்டும், அவன் உள்ளத்தில் ஏற்படுத்தும் பெருமையான எண்ணத்தை விட்டும், பழிப்பிற்குரிய அவனுடைய கவிதைகளை விட்டும் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.

என்று ஓதுவார்.

ஆதாரம்:

﴿فَإِذَا قَرَأْتَ الْقُرْآنَ فَاسْتَعِذْ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ﴾

---

41. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 600.

நபியே! (தொழுகையில்) நீர் குர்ஆன் ஓத ஆரம்பித்தால் (அதற்கு முன்பாக) விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவீராக![42]

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ ﵁ قَالَ كَانَ رَسُولُ اللهِ ﷺ إِذَا قَامَ مِنَ اللَّيْلِ كَبَّرَ ثُمَّ يَقُولُ أَعُوذُ بِاللهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ مِنْ هَمْزِهِ وَنَفْخِهِ وَنَفْثِهِ ثُمَّ يَقْرَأُ

அபூ ஸயீத் அல் குத்ரிய்யி ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இரவில் எழுந்து தொழ நிற்கும் போது தக்பீர் கட்டியப் பின் அஊது பில்லாஹிஸ் ஸமீயில் அலீமி மினஷ் ஷைத்தானிர் ரஜீமி மின் ஹம்ஸிஹி வ நஃப்கிஹி வ நஃப்ஸிஹி என்று கூறுவார்கள்.[43]

7. بِسْمِ الله - பிஸ்மில்லாஹ் ஓதுதல்

தொழுபவர் அஊது ஓதிய பின் மெதுவாக,

﴿بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ﴾

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று ஓதுவார்.

நபி ﷺ அவர்கள் பிஸ்மில்லாஹ்வை சப்தமாக ஓதினார்கள் என்பதற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லை.

ஆதாரம்:

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﵁ أَنَّ النَّبِيَّ ﷺ وَأَبَا بَكْرٍ وَعُمَرَ كَانُوا يَفْتَتِحُونَ الصَّلَاةَ بِ ﴿اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ﴾ [الفاتحة: 1]

42. ஆதாரம்: சூரா அன்னஹ்ல் 16வது அத்தியாயம் 98வது வசனம்.

43. ஆதாரம்: ஸுனன் அபூ தாவூது, எண் 775.

அனஸ் ﷛ அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்களும் அபூ பக்ர் ﷛ உமர் ﷛ ஆகியோரும் ‘அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்’ என்றே தொழுகையை ஆரம்பிப்பவர்களாக இருந்தனர்.[44]

عَنْ أَنَسٍ ﷛ قَالَ صَلَّيْتُ خَلْفَ رَسُولِ اللهِ ﷺ وَأَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ ﷡ فَلَمْ أَسْمَعْ أَحَدًا مِنْهُمْ يَجْهَرُ بِبِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

மற்றொரு அறிவிப்பில் அனஸ் ﷛ அறிவிக்கின்றார்கள்: நான் நபி ﷺ, அபூ பக்ர் ﷛, உமர் ﷛, உஸ்மான் ﷛ ஆகியோருக்குப் பின்னால் தொழுதுள்ளேன். அவர்களில் யாரும் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் சப்தமாக ஓதி நான் கேட்டதில்லை.[45]

8. قِرَاءَةُ سُورَةِ الْفَاتِحَةِ சூரத்துல் ஃபாதிஹா ஓதுதல்

இது தொழுகையின் ருக்னுகளில் ஒன்றாகும்.

பிறகு, தொழுபவர் சூரத்துல் ஃபாதிஹாவை ஓதுவார். அதை ஓதாமல் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படாது. அதை ஒவ்வொரு ஆயத்தாக நிறுத்தி நிறுத்தி நிதானமாக நல்ல குரலில் ஓதுவது சுன்னத்தாகும்.

ஆதாரம்:

عَنْ عُبَادَةَ بْنِ الصَّامِتِ ﷛ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ لاَ صَلاَةَ لِمَنْ لَمْ يَقْرَأْ بِفَاتِحَةِ الكِتَابِ

உபாதா இப்னு ஸாமித் ﷛ அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: “ஃபாதிஹதுல் கிதாபை (அல்ஹம்து சூராவை) ஓதாதவருக்குத் தொழுகை கூடாது”.[46]

44. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 743.
45. ஆதாரம்: ஸுனன் நஸாயி, எண் 907.
46. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 756.

عَنْ أُمِّ سَلَمَةَ رَضِيَ اللهُ عَنْهَا قَالَتْ كَانَ رَسُولُ اللهِ ﷺ يُقَطِّعُ قِرَاءَتَهُ يَقْرَأُ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ثُمَّ يَقِفُ اَلرَّحْمٰنِ الرَّحِيمِ ثُمَّ يَقِفُ وَكَانَ يَقْرَؤُهَا مٰلِكِ يَوْمِ الدِّينِ

உம்மு ஸலமா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் ﷺ அவர்கள் ஓதுதலை துண்டித்து துண்டித்து (-நிறுத்தி நிறுத்தி) ஓதுவார்கள். அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று ஓதுவார்கள். பின்பு (ஓதுதலை) நிறுத்தி விடுவார்கள். (பிறகு) அர்ரஹ்மானிர் ரஹீம் (என்று ஓதுவார்கள்). பின்பு (ஓதுதலை) நிறுத்தி விடுவார்கள். (பிறகு) மாலிகி யவ்மித் தீன் என்று ஓதுவார்கள்.[47]

﴿وَرَتِّلِ الْقُرْآنَ تَرْتِيلًا﴾

மேலும் குர்ஆனைத் தெளிவாக, நிறுத்தி, நிறுத்தி ஓதுவீராக.[48]

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّهُ سَمِعَ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ مَا أَذِنَ اللهُ لِشَيْءٍ مَا أَذِنَ لِنَبِيٍّ حَسَنِ الصَّوْتِ يَتَغَنَّىٰ بِالْقُرْآنِ يَجْهَرُ بِهِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் சொல்ல தான் கேட்டதாக அபூ ஹுரைரா رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “அழகிய குரலுடைய நபி ﷺ அவர்கள் குர்ஆனை ராகமாகவும் அதை சப்தமிட்டும் ஓதும்போது அல்லாஹ் அதை செவிகொடுத்து கேட்பது போல் வேறு எதையும் கேட்பதில்லை.”[49]

9. آمِيْن ஆமீன் சொல்லுதல்

(இமாமுடன் தொழும் போது) தொழுபவர் சூரத்துல் ஃபாதிஹாவை ஓதி முடித்தப் பின் ஆமீன் என்று சப்தமாகச் சொல்வார்.

ஆதாரம்:

---

47. ஆதாரம்: ஸுனனுத் திர்மிதி, எண் 2927.
48. ஆதாரம்: சூரா அல் முஸ்ஸம்மில் 73வது அத்தியாயம், 4வது வசனம்.
49. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 792.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ إِذَا أَمَّنَ الْإِمَامُ فَأَمِّنُوا فَإِنَّهُ مَنْ وَافَقَ تَأْمِينُهُ تَأْمِينَ الْمَلَائِكَةِ غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ وَقَالَ ابْنُ شِهَابٍ – وَكَانَ رَسُولُ اللَّهِ يَقُولُ آمِينَ

அபூ ஹுரைரா ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: இமாம் ஆமீன் கூறும்போது நீங்களும் ஆமீன் கூறுங்கள்! ஒருவர் கூறும் ஆமீன் வானவர்கள் கூறும் ஆமீனுடன் ஒத்து அமையுமானால் அவரின் முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. நபி ﷺ அவர்கள் ஆமீன் கூறுபவர்களாக இருந்தார்கள் என இப்னு ஷிஹாப் ﷺ குறிப்பிடுகிறார்.[50]

عَنْ وَائِلِ بْنِ حُجْرٍ ﷺ قَالَ كَانَ رَسُولُ اللَّهِ ﷺ إِذَا قَرَأَ وَلَا الضَّالِّينَ قَالَ آمِينَ وَرَفَعَ بِهَا صَوْتَهُ

வாயில் இப்னு ஹுஜ்ர் ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் வலழ்ழால்லீன் என்று ஓதி முடிக்கும்போது ஆமீன் கூறுவார்கள். மேலும், தனது சப்தத்தை உயர்த்தி ஆமீன் கூறுவார்கள்.[51]

10. اَلْقِرَاءَة அல் கிராஆ (சூரத்துல் ஃபாதிஹா ஓதியப் பின் துணை சூரா அல்லது சில வசனங்கள் ஓதுதல்)

தொழுபவர் சூரத்துல் ஃபாதிஹாவை ஓதி ஆமீன் கூறியப் பின் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் கூறி, பிறகு குர்ஆனிலிருந்து தனக்கு தெரிந்த ஒரு சூராவை ஓதுவார். சூராவாக இல்லாமல் சில வசனங்களை மட்டும் ஓதுவதாக இருந்தால், தஅவ்வுது பஸ்மலா (அவூது, பிஸ்மில்லாஹ்) எதுவும் ஓதவேண்டிய அவசியமில்லை.

---

50. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 780.
51. ஆதாரம்: ஸுனன் அபூ தாவூது, எண் 932.

ஒரு ரக்அத்தில் ஒரு சூராவை, அல்லது இரண்டு சூராக்களை, அல்லது அதிகமான சூராக்களை ஓதலாம். அல்லது ஒரு சூராவில் உள்ள சில வசனங்களை மட்டும் கூட ஓதலாம். சூரத்துல் ஃபாதிஹா ஓதிய பின் துணை சூரா அல்லது ஒரு சூராவில் உள்ள சில வசனங்களை ஓதுவது ஃபர்ழான தொழுகையின் முதல் இரண்டு ரக்அத்தில் மட்டும்தான். ஃபர்ழான தொழுகையின் பிந்திய மூன்றாவது நான்காவது ரக்அத்துகளில் சூரத்துல் ஃபாதிஹாவை மட்டும் ஓத வேண்டும்.

ஆதாரம்:

عَنْ أَبِي قَتَادَةَ ﵁ قَالَ كَانَ النَّبِيُّ ﷺ يَقْرَأُ فِي الرَّكْعَتَيْنِ الأُولَيَيْنِ مِنْ صَلاَةِ الظُّهْرِ بِفَاتِحَةِ الكِتَابِ وَسُورَتَيْنِ يُطَوِّلُ فِي الأُولَىٰ وَيُقَصِّرُ فِي الثَّانِيَةِ وَيُسْمِعُ الآيَةَ أَحْيَانًا وَكَانَ يَقْرَأُ فِي العَصْرِ بِفَاتِحَةِ الكِتَابِ وَسُورَتَيْنِ وَكَانَ يُطَوِّلُ فِي الأُولَىٰ وَكَانَ يُطَوِّلُ فِي الرَّكْعَةِ الأُولَىٰ مِنْ صَلاَةِ الصُّبْحِ وَيُقَصِّرُ فِي الثَّانِيَةِ

அபூ கதாதா ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ளுஹ்ர் தொழுகையின் முதல் இரண்டு ரக்அத்களில் ஒவ்வொரு ரக்அத்திலும் ‘அல்ஹம்து’ அத்தியாயத்தையும் வேறு ஓர் அத்தியாயத்தையும் நபி ﷺ அவர்கள் ஓதுவார்கள். (அந்த இரண்டு ரக்அத்களில்) முதல் ரக்அத்தில் நீண்ட அத்தியாயத்தையும் இரண்டாம் ரக்அத்தில் அதைவிட சிறிய அத்தியாயத்தையும் ஓதுவார்கள். சில சமயங்களில் சில வசனங்களை எங்களுக்குக் கேட்குமாறும் ஓதுவார்கள். அஸ்ர் தொழுகையில் (முதல் இரண்டு ரக்அத்களில் ஒவ்வொரு ரக்அத்திலும்) ‘அல்ஹம்து’ அத்தியாயத்தையும் வேறு இரண்டு அத்தியாயங்களையும் ஓதுவார்கள். முதல் ரக்அத்தில் நீண்ட நேரம் ஓதுவார்கள். ஸுபுஹ் தொழுகையின் முதல் ரக்அத்தில் நீண்ட

நேரம் ஓதுவார்கள். இரண்டாம் ரக்அத்தில் அதைவிட குறைந்த நேரம் ஓதுவார்கள்.[52]

11. الرُّكُوعُ ருகூஃ

இது தொழுகையின் ருக்னுகளில் ஒன்றாகும்.

தொழுபவர் ஓதுதலை முடித்தபின் சிறிது நேரம் அமைதியாக இருப்பார். பிறகு தனது இரு தோள் புஜங்களுக்கு நேராக அல்லது தனது இரு காதுகளுக்கு நேராக அல்லாஹு அக்பர் கூறியவராக தனது கைகளை உயர்த்தி ருகூஃவிற்கு செல்வார்.



புஜம் வரை உயர்த்துவது



காதுவரை உயர்த்துவது

ருகூஃவில் தனது இரு கைகளையும் விரித்த வண்ணமாக தனது இரு முழங்கால்கள் மீது பிடித்திருப்பதைப் போல் வைப்பார்.

தனது விலாப் பகுதியை விட்டும் தனது இரு முழங்கைகளையும் விலக்கி வைப்பார்.

52. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 759.



ருகூஃ செய்வது



ருகூஃ செய்வது

தனது முதுகை விரித்தும், தலையை முதுகிற்கு நேராகவும் வைப்பார்.

ருகூஃஐ மன நிறைவுடன் நிதானமாகச் செய்து அதில் தன் ரப்பை மேன்மைப்படுத்துவார்.

ஆதாரம்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ النَّبِيَّ ﷺ دَخَلَ الْمَسْجِدَ فَدَخَلَ رَجُلٌ فَصَلَّى ثُمَّ جَاءَ فَسَلَّمَ عَلَى النَّبِيِّ ﷺ فَرَدَّ النَّبِيُّ عَلَيْهِ السَّلَامَ فَقَالَ ارْجِعْ فَصَلِّ فَإِنَّكَ لَمْ تُصَلِّ فَصَلَّى ثُمَّ جَاءَ فَسَلَّمَ عَلَى النَّبِيِّ ﷺ فَقَالَ ارْجِعْ فَصَلِّ فَإِنَّكَ لَمْ تُصَلِّ ثَلَاثًا فَقَالَ وَالَّذِي بَعَثَكَ بِالْحَقِّ فَمَا أُحْسِنُ غَيْرَهُ فَعَلِّمْنِي قَالَ إِذَا قُمْتَ إِلَى الصَّلَاةِ فَكَبِّرْ ثُمَّ اقْرَأْ مَا تَيَسَّرَ مَعَكَ مِنَ الْقُرْآنِ ثُمَّ ارْكَعْ حَتَّى تَطْمَئِنَّ رَاكِعًا

அபூ ஹுரைரா ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள் பள்ளிக்கு வந்தார்கள். ஒரு மனிதரும் (அந்த நேரத்தில்) பள்ளிக்கு வந்து தொழலானார். (தொழுது முடித்ததும்) நபி ﷺ அவர்களுக்கு அந்த மனிதர் ஸலாம் கூறினார். நபி ﷺ அவர்கள் பதில் ஸலாம் கூறினார்கள். பின்பு 'திரும்பவும் நீர் தொழுவீராக! நீர் தொழவே இல்லை' என்றும் கூறினார்கள். அந்த மனிதர் முன்பு தொழுதது போன்றே மீண்டும் தொழுதுவிட்டு வந்து நபி ﷺ அவர்களுக்கு ஸலாம் கூறினார். 'திரும்பவும் தொழுவீராக! நீர் தொழவே இல்லை' என்று இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள். (இவ்வாறு மூன்று முறை நடந்தது).

அதன் பிறகு அந்த மனிதர் சத்தியமார்க்கத்துடன் உங்களை அனுப்பியுள்ள இறைவன் மீது ஆணையாக! இவ்வாறு தொழுவதைத் தவிர வேறு எதையும் எனக்கு சரியாக செய்யத் தெரியாது. எனவே எனக்குக் கற்றுத் தாருங்கள்! என்று கேட்டார். அதற்கு, நீர் தொழுகைக்காக நின்றதும் தக்பீர் கூறுவீராக! பின்னர், குர்ஆனில் உமக்கு இலகுவானவற்றை ஓதுவீராக! பின்னர், அமைதியாக ருகூவு செய்வீராக! என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.[53]

53. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 793.

عَنْ أَبِي حُمَيْدٍ السَّاعِدِيِّ ﷺ أَنَا كُنْتُ أَحْفَظَكُمْ لِصَلاَةِ رَسُولِ اللّٰهِ ﷺ رَأَيْتُهُ إِذَا كَبَّرَ جَعَلَ يَدَيْهِ حِذَاءَ مَنْكِبَيْهِ وَإِذَا رَكَعَ أَمْكَنَ يَدَيْهِ مِنْ رُكْبَتَيْهِ ثُمَّ هَصَرَ ظَهْرَهُ

அபூ ஹுமைத் அஸ்ஸாயிதீ ரலி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்களின் தொழுகை பற்றி உங்களில் நான் மிகவும் அறிந்திருக்கிறேன். நபி ﷺ அவர்கள் தக்பீர் கூறும்போது தம் இரண்டு கைகளையும் தம் தோள் புஜங்களுக்கு நேராக உயர்த்துவார்கள். ருகூவு செய்யும்போது இரண்டு கைகளையும் மூட்டுக் கால்களின் மீது நன்கு உறுதியாக படியச் செய்வார்கள். பின்னர் தம் முதுகை (வளைவு இன்றி) நேராக வைத்திருப்பார்கள்.[54]

عَنْ أَبِي حُمَيْدٍ السَّاعِدِيِّ رضي الله عنه كَانَ النَّبِيُّ ﷺ فَإِذَا رَكَعَ أَمْكَنَ كَفَّيْهِ مِنْ رُكْبَتَيْهِ وَفَرَّجَ بَيْنَ أَصَابِعِهِ

அபூ ஹுமைத் அஸ்ஸாயிதீ ரலி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள் ருகூவு செய்யும்போது இரண்டு கைகளையும் மூட்டுக் கால்களின் மீது நன்கு உறுதியாக படியச் செய்வார்கள். தங்கள் கை விரல்களை விரித்து வைப்பார்கள்.[55]

أَذْكَارُ الرُّكُوْعِ ருகூஃவில் ஓதப்படும் திக்ருகள்:

سُبْحَانَ رَبِّـيَ الْعَظِيمِ

மகத்தான என் இறைவனை நான் தூய்மைப்படுத்துகின்றேன்.

இதை ஒரு தடவை சொல்வது வாஜிப் கட்டாயம் ஆகும்.[56]

54. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 828.

55. ஆதாரம்: ஸுனன் அபூ தாவூது, எண் 731.

56. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 772

سُبُّوحٌ قُدُّوسٌ رَبُّ الْمَلَائِكَةِ وَالرُّوحِ

மிகத் தூயவன், மகா பரிசுத்தமானவன், வானவர்கள் மேலும் ரூஹ் (ஜிப்ரீல் عليه السلام) உடைய இறைவன்.[57]

سُبْحَانَكَ اللّٰهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اللّٰهُمَّ اغْفِرْ لِيْ

அல்லாஹ்வே! எங்கள் இறைவனே! உன்னைப் புகழ்ந்து, உன்னை நான் தூய்மைப் படுத்துகின்றேன். அல்லாஹ்வே! என்னை மன்னிப்பாயாக!.[58]

سُبْحَانَ ذِي الْجَبَرُوتِ وَالْمَلَكُوتِ وَالْكِبْرِيَاءِ وَالْعَظَمَةِ

அடக்கி ஆளும் வல்லமை, பேராட்சி, பெருமை மற்றும் மகத்துவத்திற்குரியவனை நான் தூய்மைப்படுத்துகின்றேன்.[59]

12. اَلْقِيَامُ مِنَ الرُّكُوْعِ ருகூஃவிலிருந்து எழுதல் (படம்)

இது தொழுகையின் ருக்னுகளில் ஒன்றாகும்.

தொழுபவர் ருகூஃவிலிருந்து தன் தலையை உயர்த்தி ஒவ்வொரு எலும்பும் அதன் இடத்திற்கு திரும்புகின்ற வரை நேராக நிற்பார்.

سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ

பொருள்: அல்லாஹ் அவனைப் புகழ்ந்தவரின் புகழை செவியேற்று விட்டான்.

என்று கூறியவராக இரு கைகளையும் புஜம் வரை அல்லது காது வரை உயர்த்துவார்.

---

57. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 487

58. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 794

59. ஆதாரம்: ஸுனன் அபூ தாவூது, எண் 873.



புஜம் வரை உயர்த்துவது



காதுவரை உயர்த்துவது

பிறகு, நேராக நின்று விட்டால் நெஞ்சின் மீது இடது கையை வைத்து, அதன் மேல் வலது கையை வைப்பார்.[60] பிறகு, பின் வரும் வார்த்தைகளில் ஏதாவது ஒன்றை ஓதுவார்:

----

60. இது சில அறிஞர்களின் கூற்றாகும். மற்றும் பல அறிஞர்கள், இந்த சிறு நிலையில் நிற்கும்போது இரு கைகளையும் தொங்கவிட்டு நிற்கவேண்டும் என்று கூறுகின்றார்கள்.



ருகூஃவிற்குப் பின் சிறு நிலை நிற்பது

رَبَّنَا لَكَ الْـحَمْدُ

எங்கள் இறைவா! உனக்கே அனைத்து புகழும் சொந்தமானது.

அல்லது,

رَبَّنَا وَلَكَ الْـحَمْدُ

பொருள்: எங்கள் இறைவா! மேலும் உனக்கே அனைத்து புகழும் சொந்தமானது.

அல்லது,

اَللّٰهُمَّ رَبَّنَا لَكَ الْـحَمْدُ

அல்லாஹ்வே! எங்கள் இறைவா! உனக்கே அனைத்து புகழும் சொந்தமானது.

அல்லது,

اَللّٰهُمَّ رَبَّنَا وَلَكَ الْـحَمْدُ

அல்லாஹ்வே! எங்கள் இறைவா! மேலும் உனக்கே அனைத்து புகழும் சொந்தமானது.

அதிகமாக ஓத வாய்ப்பிருந்தால்,

رَبَّنَا وَلَكَ الْـحَمْدُ حَمْدًا كَثِيرًا طَيِّبًا مُبَارَكًا فِيهِ

பொருள்: எங்கள் இறைவா! மேலும் அதிகமான, தூய்மையான, வளமான புகழ் அனைத்தும் உனக்கே சொந்தமானது.

இன்னும் அதிகமாக ஓத நாடினால்,

رَبَّنَا لَكَ الْـحَمْدُ مِلْءَ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ أَهْلَ الثَّنَاءِ وَالْمَجْدِ أَحَقُّ مَا قَالَ الْعَبْدُ وَكُلُّنَا لَكَ عَبْدٌ اَللّٰهُمَّ لَا مَانِعَ لِمَا أَعْطَيْتَ وَلَا مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلَا يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

பொருள்: எங்கள் இறைவா! வானங்களும் பூமியும் நிரம்புகின்ற அளவுக்கு, நீ நாடும் இன்ன பிற பொருள்கள் அனைத்தும் நிரம்புகின்ற அளவுக்கு புகழனைத்தும் உனக்கே சொந்தமானது. புகழுக்கும் மாண்புக்கும் உரியவனே! அடியார்கள் புகழ்ந்து கூறும் சொற்களுக்கு மிகவும் தகுதி வாய்ந்தவன் நீதான். நாங்கள்

அனைவரும் உன் அடிமைகள்தாம். அல்லாஹ்வே! நீ கொடுத்ததைத் தடுப்பவர் யாருமில்லை. நீ தடுத்ததைக் கொடுப்பவர் யாருமில்லை. செல்வந்தரின் செல்வம் உன் அருளின்றி அவருக்கு பலனளிக்காது.

13. اَلسَّجْدَةُ الأُوْلَى முதல் ஸஜ்தா

இது தொழுகையின் ருக்னுகளில் ஒன்றாகும்.



நிலையிலிருந்து ஸஜ்தாவிற்கு செல்லும் முறை



ஸஜ்தா செய்யும் முறை

பிறகு, தொழுபவர் இரு கைகளையும் உயர்த்தாமல் அல்லாஹு அக்பர் என்று கூறியவராக ஸஜ்தா செய்வதற்காக குனிவார்.

தனது முட்டுக்காலுக்கு முன்பாக தனது இரு கைகளையும் முதலில் பூமியின் மீது வைப்பார். கைகளை முதலில் வைப்பதற்கு முன்பாக முட்டுக்கால்களை வைப்பதற்கு நபி ﷺ அவர்களிடமிருந்து ஆதாரப்பூர்வமான அறிவிப்பு ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

ஏழு உறுப்புக்கள் மீது ஸஜ்தா செய்வார் (1, 2. இரண்டு உள்ளங்கைகள், 3, 4. இரண்டு முட்டுக்கால்கள், 5, 6. இரண்டு கால் பாதங்கள், 7. நெற்றியும் மூக்கும்).

தனது மூக்கு, நெற்றி, இரண்டு கைகள், இரண்டு முட்டுக்கால்கள், இரண்டு கால் பாதங்களின் ஓரங்கள் இவை அனைத்தையும் நன்கு பூமியில் படும்படி வைப்பார்.

தனது இரு உள்ளங்கைகளை விரித்து அதன் விரல்கள் கிப்லா திசையை முன்னோக்கியவாறும் தனது இரு தோள்புஜங்களுக்கு நேராக அல்லது இரு காதுகளுக்கு நேராக வைப்பார்.

தனது இரு முழங்கைகளையும் தனது விலாப் பகுதியை விட்டும்,

தனது வயிற்றை தனது தொடையை விட்டும், தனது தொடையை கால்களை விட்டும் விலக்கி வைப்பார்.

தனது முன்னங்கையையும் முட்டுக்கையையும் பூமியை விட்டும் உயர்த்தி வைப்பார்.

தனது இரு கால்களை நிறுத்தியும், குதிகால்களை இணைத்தும், கால் விரல்களுக்கிடையில் இடைவெளி ஏற்படுத்தியும், கால் விரல்களின் ஓரங்கள் கிப்லா திசையை முன்னோக்கியவாறும் வைப்பார்.

தனது ஸுஜூதை மன நிறைவுடன் நிதானமாக செய்வார். அதிகமாக அல்லாஹ்விடம் தன் தேவைகளை வேண்டி பிரார்த்திப்பார்.

தொழுபவர் ஸுஜூதிலோ அல்லது ருகூவிலோ குர்ஆன் வசனங்களை ஓதுவது கூடாது.

ஆதாரம்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قال ثُمَّ اسْجُدْ حَتَّىٰ تَطْمَئِنَّ سَاجِدًا، ثُمَّ ارْفَعْ حَتَّىٰ تَطْمَئِنَّ جَالِسًا ثُمَّ اسْجُدْ حَتَّىٰ تَطْمَئِنَّ سَاجِدًا

அபூ ஹுரைரா ؓ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ (ஒரு மனிதருக்கு தொழுகையை கற்றுக் கொடுக்கும் போது) கூறினார்கள்: பின்னர், நிதானமாக ஸஜ்தாச் செய்வீராக! ஸஜ்தாவிலிருந்து எழுந்து நிதானமாக உட்காருவீராக! பின்னர், நிதானமாக ஸஜ்தாச் செய்வீராக![61]

عَنْ أَبِي هُرَيْرَةَ ؓ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِذَا سَجَدَ أَحَدُكُمْ فَلَا يَبْرُكْ كَمَا يَبْرُكُ الْبَعِيرُ وَلْيَضَعْ يَدَيْهِ قَبْلَ رُكْبَتَيْهِ

அபூ ஹுரைரா ؓ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் ஸஜ்தா செய்தால் ஒட்டகம்

---

61. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 793.

மண்டியிட்டு உட்காருவதைப் போல அவர் உட்கார வேண்டாம்! தனது முட்டுக் கால்களுக்கு முன்பாக தனது இரு கைகளையும் அவர் வைக்கட்டும்.[62]

عَنِ ابْنِ عَبَّاسٍ ﵄ قَالَ قَالَ النَّبِيُّ ﷺ أُمِرْتُ أَنْ أَسْجُدَ عَلَى سَبْعَةِ أَعْظُمٍ عَلَى الْجَبْهَةِ وَأَشَارَ بِيَدِهِ عَلَى أَنْفِهِ وَالْيَدَيْنِ وَالرُّكْبَتَيْنِ وَأَطْرَافِ الْقَدَمَيْنِ

இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஏழு உறுப்புகள் மீது ஸஜ்தாச் செய்யும்படி நான் கட்டளையிடப் பட்டுள்ளேன் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். அதாவது, நெற்றியின் மீது, மற்றும் இரண்டு கைகள், இரண்டு முட்டுக் கால்கள், இரண்டு பாதங்களின் ஓரங்கள் மீது. இவ்வாறு நெற்றியின் மீது என்று நபி ﷺ அவர்கள் கூறியபோது தனது கையால் தனது மூக்கையும் சுட்டிக்காட்டினார்கள். (அதாவது, மூக்கையும் நெற்றியையும் தரையில் படும்படி வைக்க வேண்டும்.)[63]

عَنْ وَائِلِ بْنِ حُجْرٍ ﵁ قَالَ كَانَ رَسُولُ اللهِ ﷺ إِذَا سَجَدَ يَكُونُ يَدَاهُ حِذَاءَ أُذُنَيْهِ

வாயில் இப்னு ஹுஜ்ர் ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள் ஸஜ்தா செய்தால் அவர்களுடைய இரு கைகளையும் அவர்களின் இரு காதுகளுக்கு நேராக வைப்பார்கள்.[64]

عَنْ أَبِي حُمَيْدٍ السَّاعِدِيِّ ﵁ قَالَ ثُمَّ هَوَى إِلَى الْأَرْضِ سَاجِدًا ثُمَّ قَالَ اللهُ أَكْبَرُ ثُمَّ تَجَافَى عَضُدَيْهِ عَنْ إِبْطَيْهِ وَفَتَحَ أَصَابِعَ رِجْلَيْهِ

---

62. ஆதாரம்: ஸுனன் அபூ தாவூது, எண் 840.

63. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 812.

64. ஆதாரம்: அஸ்ஸுனனுல் குப்ரா -பைஹகீ, எண் 2692.

அபூ ஹுமைத் அஸ்ஸாயிதீ ﵁ அவர்கள் அறிவிக்கின்ற ஒரு ஹதீஸில் வருவதாவது, பிறகு ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் ஸஜ்தா செய்வதற்காக பூமியை நோக்கி குனிந்தார்கள். பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். பிறகு (ஸஜ்தாவில்) தனது இரு முழங்கைகளின் மேல் பகுதிகளை தனது அக்குள்களை விட்டும் தூரமாக்கி வைத்தார்கள். தனது இரு கால்களின் விரல்களையும் (ஒன்றுக்கொன்று நெருக்கமாக இருக்கும்படி வைக்காமல்) திறந்த நிலையில் வைத்தார்கள்.[65]

عن عَائِشَة ﵂ زَوْجِ النَّبِيِّ ﷺ قَالَتْ فَقَدْتُ رَسُولَ اللهِ ﷺ وَكَانَ مَعِي عَلَىٰ فِرَاشِي فَوَجَدْتُهُ سَاجِدًا رَاصًّا عَقِبَيْهِ مُسْتَقْبِلًا بِأَطْرَافِ أَصَابِعِهِ الْقِبْلَةَ

நபி ﷺ அவர்களின் மனைவியான ஆயிஷா ﵂ அவர்கள் கூறுகிறார்கள்: என்னுடைய படுக்கையில் என்னுடன் இருந்த அல்லாஹ்வின் தூதரை நான் காணவில்லை. (அவர்களை நான் தேடினேன்.) அப்போது, அவர்கள் ஸஜ்தா செய்த நிலையில் இருந்தார்கள். அவர்கள் தமது இரு குதிங்கால்களை சேர்த்தவாறும், தமது கால் விரல்களின் ஓரங்களை கிப்லாவின் பக்கம் முன்னோக்கி வைத்தவாறும் இருப்பதை நான் கண்டேன்.[66]

عن عَائِشَة ﵂ قالت فَوَقَعَتْ يَدِي عَلَىٰ بَطْنِ قَدَمَيْهِ
وَهُوَ فِي الْمَسْجِدِ وَهُمَا مَنْصُوبَتَانِ

ஆயிஷா ﵂ அவர்கள் அறிவிக்கின்ற ஒரு ஹதீஸில் வருவதாவது, நபி ﷺ அவர்கள் ஸஜ்தா நிலையில் இருந்தார்கள். எனது கை, அவர்களது உள்ளங்கால்கள் மீது பட்டது. அவர்களது உள்ளங்கால்கள் இரண்டும் நேராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.[67]

---

65. ஆதாரம்: ஸஹீஹ் இப்னு குஸைமா, எண் 587, 651.
66. ஆதாரம்: ஸஹீஹ் இப்னு குஸைமா, எண் 654.
67. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 839.

DARUL HUDA

أَذْكَارُ السَّجْدَةِ ஸஜ்தாவில் ஓத வேண்டிய திக்ருகள்:

ஸஜ்தாவில் அல்லாஹ்வை துதிப்பதற்காக பல திக்ருகளை நபி ﷺ அவர்கள் கற்றுத் தந்திருக்கின்றார்கள். அவற்றில் எந்த திக்ரை வேண்டுமானாலும் கூறலாம். ஸஜ்தாவில் ஒரு முறையாவது பின் வருகின்ற திக்ருகளில் ஒன்றைக் கூறுவது வாஜிபாக இருக்கும். மூன்று முறை கூறுவது சுன்னா ஆகும். அதற்கு மேல் எவ்வளவு நீண்ட நேரம் வேண்டுமானாலும் கூறுவது சிறப்பாகும்.

திக்ருகளுடன் சேர்த்து குர்ஆன் சுன்னாவில் கூறப்பட்டுள்ள துஆக்களையும் ஸஜ்தாவில் கேட்கலாம்.

அந்த திக்ருகள் வருமாரு:

سُبْحٰنَ رَبِّـيَ الْأَعْلٰى

பொருள்: மிக உயர்வான என் இறைவனை நான் தூய்மைப் படுத்துகின்றேன்.[68]

سُبْحَانَكَ اللّٰهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اللّٰهُمَّ اغْفِرْ لِي

பொருள்: அல்லாஹ்வே! எங்கள் இறைவனே! உன்னை நான் புகழ்ந்து தூய்மைப் படுத்துகின்றேன். அல்லாஹ்வே! என்னை மன்னிப்பாயாக![69]

سُبُّوحٌ قُدُّوسٌ رَبُّ الْمَلَائِكَةِ وَالرُّوحِ

பொருள்: மிகத் தூய்மையானவன், மிக பரிசுத்தமானவன் வானவர்கள் இன்னும் ரூஹ் என்னும் (ஜிப்ரீலின்) இறைவன்.[70]

اَللّٰهُمَّ اغْفِرْ لِي ذَنْبِي كُلَّهُ دِقَّهُ وَجِلَّهُ وَأَوَّلَهُ وَآخِرَهُ وَعَلَانِيَتَهُ وَسِرَّهُ

---

68. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 772.

69. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 794.

70. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 487.

பொருள்: அல்லாஹ்வே! சிறிய, பெரிய, ஆரம்பமான, கடைசியான, வெளிப்படையான, ரகசியமான எனது அனைத்து பாவங்களையும் எனக்கு மன்னிப்பாயாக![71]

اَللّٰهُمَّ لَكَ سَجَدْتُ وَبِكَ آمَنْتُ وَلَكَ أَسْلَمْتُ سَجَدَ وَجْهِي لِلَّذِي خَلَقَهُ وَصَوَّرَهُ وَشَقَّ سَمْعَهُ وَبَصَرَهُ تَبَارَكَ اللّٰهُ أَحْسَنُ الْخَالِقِينَ

பொருள்: அல்லாஹ்வே! உனக்கு நான் சிரம்பணிந்து விட்டேன். உன்னை நான் நம்பிக்கை கொண்டேன். உனக்கு நான் அடிபணிந்து விட்டேன். என் முகத்தைப் படைத்து வடிவமைத்து அதில் காதையும் கண்ணையும் தனித்தனியாக அமைத்துத் தந்தவனுக்கு முன் என் முகம் பணிந்து விட்டது. உருவம் அமைப்பவர்களில் மிக அழகானவனான அல்லாஹ் மிக பாக்கியம் மிக்கவன்.[72]

ஸஜ்தாவில் துஆ கேட்பதின் சிறப்பு:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ رَسُولَ اللّٰهِ ﷺ قَالَ أَقْرَبُ مَا يَكُونُ الْعَبْدُ مِنْ رَبِّهِ وَهُوَ سَاجِدٌ فَأَكْثِرُوا الدُّعَاءَ

அபூ ஹுரைரா ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: அடியான் தன் இறைவனிடம் இருக்கும் நிலைகளில் மிக நெருக்கமாக இருப்பது, அவர் ஸஜ்தாவில் இருக்கின்ற நிலையாகும். எனவே, நீங்கள் (ஸஜ்தாவில்) துஆக்களை அதிகப்படுத்துங்கள்.[73]

14. اَلْجَلْسَةُ بَيْنَ السَّجْدَتَيْنِ இரு ஸஜ்தாக்களுக்கிடையில் உட்காருதல்

இதுவும் தொழுகையின் ருக்னுகளில் ஒன்றாகும்.

---

71. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 483.
72. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 771.
73. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 482.



சிறு இருப்பில் உட்காரும் முறை



சிறு இருப்பில் உட்காரும் முறைகள்

அல்லாஹு அக்பர் என்று கூறியவராக தொழுபவர் ஸுஜூதிலிருந்து தன் தலையை உயர்த்துவார்.

தொழுபவர் உட்காரும்போது إِفْتِرَاش இஃப்திராஷ் முறையில் உட்காருவார். அதாவது, தனது இடது காலை விரித்து வைத்து, வலது காலை நட்டு வைத்து, விரல்களை கிப்லாவை முன்னோக்கியவாறு வைத்து, வலது கையை வலது தொடையிலும் அல்லது முட்டுக் காலிலும் அதேபோன்று இடது கையையும் வைத்து உட்காருதல் வேண்டும். முட்டுக்கால்களில் தனது இரு கைகளையும் வைக்கும் போது விரித்து வைக்க வேண்டும். இரண்டு ஸஜ்தாக்களுக்கு இடையில் இருக்கின்ற இந்த சிறு இருப்பில் ஆட்காட்டி விரலைக் கொண்டு சுட்டிக்காட்டுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

அல்லது إِقْعَاء இக்ஆ முறையில் உட்காருவார். அதாவது: தனது இரு கால்களையும் நட்டு வைத்து, அதன் மீது தனது இரு பித்தட்டுகளை வைத்து உட்காருதல்.

இந்த இருப்பில் ஒவ்வொரு எலும்பும் அதன் இடத்தை வந்தடைகின்ற அளவிற்கும், நேராக உட்கார்ந்து மனநிறைவு ஏற்படுகின்ற அளவிற்கும் உட்கார வேண்டும்.

ருகூஃ, ருகூஃவிற்குப் பின் எழுந்து நிற்கும் நிலை, ஸுஜூத், இரு ஸுஜூதுக்கும் இடையில் உட்காரும் நிலை ஆகியவற்றின் அளவுகளை ஒன்று மற்றொன்றுக்கு நெருக்கமாக அல்லது சமமாக ஆக்கிக் கொள்வது சிறந்தது.

இந்த சிறு இருப்பில்,

رَبِّ اغْفِرْ لِيْ رَبِّ اغْفِرْ لِيْ

என்று ஓத வேண்டும்.

பொருள்: என் இறைவா! என்னை மன்னிப்பாயாக! என் இறைவா! என்னை மன்னிப்பாயாக!

இவ்வாறு ஓதுவது வாஜிப் -அவசியமாகும்.[74]

فَعَنْ طَا وُوسٍ رحمه الله أَنّه قَالَ قُلْنَا لِابْنِ عَبَّاسٍ رضي الله عنه فِي الْإِقْعَاءِ عَلَى الْقَدَمَيْنِ فَقَالَ هِيَ السُّنَّةُ فَقُلْنَا لَهُ إِنَّا لَنَرَاهُ جَفَاءً بِالرَّجُلِ فَقَالَ ابْنُ عَبَّاسٍ بَلْ هِيَ سُنَّةُ نَبِيِّكَ ﷺ

தாவூஸ் رحمه الله அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்களிடம் (இரு ஸஜ்தாக்களுக்கு நடுவே) பாதங்கள் மீது (அவற்றை நட்டு வைத்து) அமர்வது பற்றிக் கேட்டோம். அவர்கள், அது நபிவழிதான் என்று சொன்னார்கள். நாங்கள், இவ்வாறு அமர்வது அந்த மனிதரின் கடினத் தன்மையைச் சேர்ந்த செயல் என்றே நாங்கள் கருதுகிறோம் என்றோம். அதற்கு இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்கள், இல்லை, அது உங்கள் நபி ﷺ அவர்களின் வழிமுறைதான் என்று கூறினார்கள்.[75]

عَنْ عَائِشَةَ رضي الله عنها قَالَتْ وَكَانَ النَّبِيُّ ﷺ يَفْرِشُ رِجْلَهُ الْيُسْرَىٰ وَيَنْصِبُ رِجْلَهُ الْيُمْنَىٰ

ஆயிஷா رضي الله عنها அவர்கள் அறிவிக்கின்ற ஒரு ஹதீஸில் வருவதாவது, நபி ﷺ அவர்கள் (இருப்பில்) தனது இடது காலை விரித்தும், தனது வலது காலை நட்டும் வைப்பார்கள்.[76]

15. اَلسَّجْدَةُ الثَّانِيَةُ இரண்டாவது ஸஜ்தா

இது தொழுகையின் ருக்னுகளில் ஒன்றாகும்.

பிறகு, அல்லாஹு அக்பர் என்று கூறியவராக தொழுபவர் இரண்டாவது ஸஜ்தாவை செய்வார்.

74. ஆதாரம்: இப்னு மாஜா, எண் 897.
75. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 536.
76. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 498.

முதல் ஸஜ்தாவில் செய்தது போலவே இரண்டாவது ஸஜ்தாவிலும் செய்வார்.

16. جَلْسَةُ الْاِسْتِرَاحَةِ ஓய்வின் அமர்வு

இது தொழுகையின் ஸுன்னத்துகளில் ஒன்றாகும்.



جَلْسَةُ الْاِسْتِرَاحَةِ – *ஓய்வின் அமர்வு*

பிறகு, ஒவ்வொரு எலும்பும் அதன் இடத்தை வந்தடைந்து, நேராக உட்காரும் அளவிற்கு தொழுபவர் இரண்டாவது ஸுஜூதிலிருந்து தன் தலையை உயர்த்துவார்.

தனது இடது காலை விரித்து வைத்து, வலது காலை நட்டு வைத்து சிறிது நேரம் உட்காருவார். இந்த இருப்பில் எந்த துஆவும் திக்ரும் இல்லை.

ஆதாரம்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ فِي حَدِيْثِ الْـمُسِيئِ فِي صَلاتِهِ ثُمَّ اسْجُدْ حَتَّىٰ تَطْمَئِنَّ

سَاجِدًا ثُمَّ ارْفَعْ حَتَّىٰ تَطْمَئِنَّ جَالِسًا ثُمَّ اسْجُدْ حَتَّىٰ تَطْمَئِنَّ سَاجِدًا ثُمَّ ارْفَعْ حَتَّىٰ تَطْمَئِنَّ جَالِسًا ثُمَّ افْعَلْ ذَلِكَ فِي صَلاَتِكَ كُلِّهَا

அபூ ஹுரைரா ﵁ அவர்கள் தொழுகையில் தவறு செய்தவர் பற்றி அறிவிக்கின்ற ஹதீஸில் வருவதாவது: (நபி ﷺ அவர்கள் அவருக்கு ஸுஜூதைக் கற்றுக் கொடுக்கும் போது கூறினார்கள்:) பிறகு, மனநிறைவு ஏற்படுகின்ற அளவிற்கு ஸஜ்தா செய்வீராக! பிறகு தலையை உயர்த்தி மனநிறைவு ஏற்படுகின்ற அளவிற்கு உட்கார்ந்து இருப்பீராக! பிறகு, மனநிறைவு ஏற்படுகின்ற அளவிற்கு ஸஜ்தா செய்வீராக! பிறகு தலையை உயர்த்தி மனநிறைவு ஏற்படுகின்ற அளவிற்கு உட்கார்ந்து இருப்பீராக! இவற்றை (-ஒவ்வொரு கடமையையும் மன நிம்மதி ஏற்படுகின்ற வரை செய்வதை) உம்முடைய அனைத்து தொழுகையிலும் நீர் செய்வீராக![77]

17. اَلْقِيَامُ إِلَى الرَّكْعَةِ الثَّانِيَّةِ இரண்டாவது ரக்அத்திற்காக எழுதல்:

இது தொழுகையின் ருக்னுகளில் ஒன்றாகும்.



இரண்டாவது ரக்அத்திற்காக எழுதல்

77. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 6251.

பிறகு, தொழுபவர் அல்லாஹு அக்பர் என்று கூறியவராகவும் தனது இரு கைகளையும் பூமியின் மீது ஊன்றியவராகவும் இரண்டாவது ரக்அத்திற்கு எழுவார்.

மாவு குழைப்பதைப் போன்று இரு கைவிரல்களையும் மடக்கிக் கொண்டு எழுவதற்கு ஆதாரப்பூர்வமான நபிமொழி ஏதும் இல்லை.

முதல் ரக்அத்தின் அளவைவிட இரண்டாவது ரக்அத்தின் அளவை கொஞ்சம் சுருக்கி, துஆஉல் இஸ்திஃப்தாஹ் -ஆரம்ப துஆ ஓதாமல் முதல் ரக்அத்தில் செய்தது போலவே இரண்டாவது ரக்அத்திலும் செய்ய வேண்டும்.

ஆதாரம்:

عَنْ مَالِكِ بْنِ الْـحُوَيْرِثِ ﵁ قَالَ كَانَ رَسُولُ اللّٰهِ ﷺ يُصَلِّي وَإِذَا رَفَعَ رَأْسَهُ عَنِ السَّجْدَةِ الثَّانِيَةِ جَلَسَ وَاعْتَمَدَ عَلَى الأَرْضِ ثُمَّ قَامَ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் தொழுத முறையை மாலிக் இப்னுல் ஹுவைரிஸ் ﵁ அவர்கள் கூறுகிறார்கள்: ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் இரண்டாவது ஸஜ்தாவிலிருந்து தன் தலையை உயர்த்தும்போது, இருப்பில் அமர்ந்து (கைகளை) பூமியின் மீது ஊன்றி, பிறகு எழுந்திருப்பார்கள்.[78]

18. اَلتَّشَهُّدُ الْأَوَّلُ முதல் தஷஹ்ஹுத்

இது தொழுகையின் வாஜிபுகளில் ஒன்றாகும்.

78. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 824.





முதல் தஷஹ்ஹூத்துக்காக அமர்வது மற்றும் விரலைக்கொண்டு சைகை செய்வது. பெருவிரல் நுனியையும் நடுவிரல் நுனியையும் இணைத்து வளையத்தைப் போன்று வைப்பது.

தொழுபவர் இரண்டாவது ரக்அத்தை முடித்தப் பின் ளுஹ்ர், அஸ்ர், மஃரிப், இஷா போன்ற தொழுகைகளில் முதல் தஷஹ்ஹுதுடைய இருப்பில் உட்காருவார்.

இரு ஸஜ்தாக்களுக்கு இடையில் உட்கார்ந்ததைப் போலவே தனது இடது காலை விரித்து வைத்து, வலது காலை நட்டு வைத்து உட்காருவார். தனது இரு கைகளையும் அதன் விரல்களையும் இரு ஸஜ்தாக்களுக்கு இடையில் உட்காரும் இருப்பில் விவரித்ததைப் போலவே செய்வார்.

மேலும், கூடுதலாக இந்த இருப்பில் தனது வலது உள்ளங்கைகளின் விரல்கள் அனைத்தையும் மடக்கி ஆள்காட்டி விரலை கிப்லாவை முன்னோக்கி வைத்து அல்லாஹ்விடம் துஆ செய்வது போன்று உயர்த்தியும் தாழ்த்தியும் அசைத்துக் கொண்டிருக்க வேண்டும். அல்லது அசைக்காமல் உயர்த்தி வைக்க வேண்டும். தஷஹ்ஹுதை ஓதி முடிக்கும் வரை ஆள்காட்டி விரலையே பார்க்க வேண்டும். தஷஹ்ஹுதில் ஆள்காட்டி விரலை வளைத்த வண்ணமாக வைப்பதற்கு ஆதாரமாக நபிமொழி ஏதும் இல்லை.

தனது ஆட்காட்டி விரலால் சுட்டிக்காட்டும் சமயத்தில் பெருவிரலை நடுவிரல் மீது வைக்கவேண்டும். சிலசமயம் பெருவிரல் நுனியையும் நடுவிரல் நுனியையும் இணைத்து வளையத்தைப் போன்று வைக்கவேண்டும். இடது கையை இடது முட்டுக்காலின் மீது முன்னால் விவரிக்கப்பட்டதைப் போல் விரித்து வைக்கவேண்டும்.

பிறகு, தொழுபவர் பின்வரும் தஷஹ்ஹுதை ஓதுவார்:

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلَىٰ عِبَادِ اللّٰهِ الصَّالِحِينَ أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

பிறகு, தஷஹ்ஹுதை தொடர்ந்து நபி ﷺ அவர்கள் மீது பின்வரும் ஸலவாத்தை ஓதுவார்:

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى إِبْرَاهِيمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى إِبْرَاهِيمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

முதல் தஷஹ்ஹுதில் நபி ﷺ அவர்கள் ஸலவாத் ஓதவில்லை என்பதற்கு ஆதாரம் இல்லை.

ஆதாரம்:

عَنْ أَبِي حُمَيْدٍ السَّاعِدِيِّ رضي الله عنه قَالَ أَنَا كُنْتُ أَحْفَظَكُمْ لِصَلاةِ الرَّسُوْلِ فَإِذَا جَلَسَ فِي الرَّكْعَتَيْنِ جَلَسَ عَلَىٰ رِجْلِهِ الْيُسْرَىٰ وَنَصَبَ الْيُمْنَىٰ

அபூ ஹுமைத் அஸ்ஸாயிதீ رضي الله عنه அவர்கள் கூறுகிறார்கள்: நபி ﷺ அவர்களின் தொழுகையை உங்களில் நான் மிகவும் மனனம் செய்துள்ளேன்: நபி ﷺ அவர்கள் இரண்டாவது ரக்அத்தில் அமரும் போது இடது கால் மீது அமர்ந்து வலது காலை நிறுத்தி வைப்பார்கள்[79]

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ مَسْعُوْدٍ رضي الله عنه قَالَ كُنَّا نَقُولُ فِي الصَّلَاةِ خَلْفَ رَسُولِ اللّٰهِ ﷺ السَّلَامُ عَلَى اللّٰهِ السَّلَامُ عَلَىٰ فُلَانٍ. فَقَالَ لَنَا رَسُولُ اللّٰهِ ﷺ ذَاتَ يَوْمٍ إِنَّ اللّٰهَ هُوَ السَّلَامُ فَإِذَا قَعَدَ أَحَدُكُمْ فِي الصَّلَاةِ فَلْيَقُلْ اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ

79. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 828.

السَّلَامُ عَلَيْنَا وَعَلَىٰ عِبَادِ اللهِ الصَّالِحِينَ فَإِذَا قَالَهَا أَصَابَتْ كُلَّ عَبْدٍ لِلّٰهِ صَالِحٍ فِي السَّمَاءِ وَالْأَرْضِ أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ ثُمَّ يَتَخَيَّرُ مِنَ الْمَسْأَلَةِ مَا شَاءَ

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களைப் பின்தொடர்ந்து தொழுகையில் அஸ்ஸலாமு அலல்லாஹ், அஸ்ஸலாமு அலா ஃபுலான் (பொருள்: அல்லாஹ்வின் மீது சாந்தி உண்டாகட்டும், இன்னாரின் மீது சாந்தி உண்டாகட்டும்) என்று கூறிவந்தோம். (இதைக் கண்ட) அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் ஒரு நாள் எங்களிடம், நிச்சயமாக அல்லாஹ்வே ஸலாம் (சாந்தியளிப்பவன்) ஆவான். எனவே, உங்களில் ஒருவர் தொழுகையி(ன் இருப்பி)ல் அமர்ந்தால்,

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ السَّلَامُ عَلَيْنَا وَعَلَىٰ عِبَادِ اللهِ الصَّالِحِينَ أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

உச்சரிப்பு: அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து, அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹந் நபிய்யு, வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு. அஸ்ஸலாமு அலைனா வ அலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அல் லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு

பொருள்: சொல், செயல், பொருள் சார்ந்த எல்லாக் காணிக்கைகளும் வணக்கங்களும் பாராட்டுகளும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே! உங்கள்மீது சாந்தியும் அல்லாஹ்வின் அருளும் சுபிட்சமும்

உண்டாகட்டுமாக! எங்கள்மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாகட்டும்!

என்று கூறட்டும்! இவ்வாறு அவர் கூறினால் வானம் பூமியிலுள்ள நல்லடியார்கள் அனைவருக்கும் அது ஏற்பட்டு விடுகிறது. மேலும், (அவர் கூறட்டும்:) அஷ்ஹது அல் லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு (பொருள்: அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்று நான் உறுதிமொழிகிறேன். மேலும், முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதருமாவார்கள் என்றும் நான் உறுதி மொழிகிறேன்) என்று கூறுவார். பிறகு அவர் விரும்பியவற்றை (அல்லாஹ்விடம்) பிரார்த்திப்பார் என்று கூறினார்கள்.[80]

عَنِ ابْنِ مَسْعُودٍ رضي الله عنه يَقُولُ عَلَّمَنِي رَسُولُ اللهِ ﷺ وَكَفِّي بَيْنَ كَفَّيْهِ التَّشَهُّدَ كَمَا يُعَلِّمُنِي السُّورَةَ مِنَ الْقُرْآنِ اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ اَلسَّلاَمُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ اَلسَّلاَمُ عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللهِ الصَّالِحِينَ أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

இப்னு மஸ்வூத் رضي الله عنه அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் ﷺ அவர்களின் இரண்டு கைகளுக்கிடையே என் கை இருந்த நிலையில், குர்ஆனின் அத்தியாயத்தைக் கற்றுத்தருவதைப் போன்று (தொழுகையின் இருப்பில் ஓதப்படும்) தஷஹ்ஹு(த் எனும் அத்தஹிய்யாத்)தை எனக்கு அவர்கள் கற்றுத் தந்தார்கள். (அது பின்வருமாறு:) அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து, அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹந் நபிய்யு வரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு, அஸ்ஸலாமு அலைனா வ அலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன்; அஷ்ஹது அல் லா இலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு

80. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 498. ஸஹீஹுல் புகாரி, எண் 7381, 6328, 6230.

DARUL HUDADAR

வ ரசூலுஹு (அனைத்துக் காணிக்கைகளும் வணக்கங்களும் பாராட்டுகளும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே! உங்களின் மீது சாந்தியும் அல்லாஹ்வின் அருளும் சுபிட்சமும் நிலவட்டுமாக! எங்களின் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்களின் மீதும் சாந்தி நிலவட்டுமாக! வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் உறுதி கூறுகிறேன். மேலும், முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்றும் நான் உறுதி கூறுகிறேன்).[81]

عَنْ عَبْدِ الرَّحْمٰنِ بْنِ أَبِي لَيْلَىٰ ؓ قَالَ لَقِيَنِي كَعْبُ بْنُ عُجْرَةَ فَقَالَ أَلاَ أُهْدِي لَكَ هَدِيَّةً سَمِعْتُهَا مِنَ النَّبِيِّ ﷺ؟ فَقُلْتُ بَلَىٰ فَأَهْدِهَا لِي فَقَالَ سَأَلْنَا رَسُولَ اللهِ ﷺ فَقُلْنَا يَا رَسُولَ اللهِ ﷺ كَيْفَ الصَّلاَةُ عَلَيْكُمْ أَهْلَ الْبَيْتِ فَإِنَّ اللهَ قَدْ عَلَّمَنَا كَيْفَ نُسَلِّمُ عَلَيْكُمْ؟ قَالَ قُولُوا اَللّٰهُمَّ صَلِّ عَلَىٰ مُحَمَّدٍ وَعَلَىٰ آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَىٰ إِبْرَاهِيمَ وَعَلَىٰ آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلَىٰ مُحَمَّدٍ وَعَلَىٰ آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَىٰ إِبْرَاهِيمَ وَعَلَىٰ آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

அப்துர் ரஹ்மான் இப்னு அபீ லைலா ؓ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: என்னை கஅப் இப்னு உஜ்ரா ؓ சந்தித்து, நபி ﷺ அவர்களிடமிருந்து நான் செவியுற்ற ஓர் அன்பளிப்பை உனக்கு நான் வழங்கட்டுமா? என்று கேட்டார்கள். நான், ஆம், அதை எனக்கு வழங்குங்கள் என்றேன். உடனே அவர்கள், நாங்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம், தங்கள் மீதும் தங்கள் குடும்பத்தார் மீதும் ஸலவாத்து சொல்வது எப்படி? (என்று எங்களுக்குக் கற்றுக் கொடுங்கள்) ஏனெனில், தங்களுக்கு நாங்கள் ஸலாம் சொல்வது

81. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 6265.

எப்படி என்று அல்லாஹ் எங்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறான் என்று கேட்டோம். அதற்கு அவர்கள்,

اَللّٰهُمَّ صَلِّ عَلَىٰ مُحَمَّدٍ وَعَلَىٰ آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَىٰ إِبْرَاهِيمَ وَعَلَىٰ آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلَىٰ مُحَمَّدٍ وَعَلَىٰ آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَىٰ إِبْرَاهِيمَ وَعَلَىٰ آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

உச்சரிப்பு: அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக ஹமீதுன் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்றாஹீம வ அலா ஆலி இப்றாஹீம இன்னக ஹமீதுன் மஜீத்.

பொருள்: இறைவா! இப்றாஹீமின் மீதும் இப்றாஹீமின் குடும்பத்தார் மீதும் நீ கருணை புரிந்ததைப் போல் முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் கருணை புரிந்திடு. நீயே புகழுக்குரியவனும், கண்ணியம் மிக்கவனும் ஆவாய். இறைவா! இப்றாஹீமின் மீதும் இப்றாஹீமின் குடும்பத்தார் மீதும் நீ உன் அருள் வளத்தைப் பொழிந்ததைப் போல் முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் உன் அருள் வளத்தைப் பொழிந்திடு, நீயே புகழுக்குரியவனும், கண்ணியம் மிக்கவனும் ஆவாய் என்று சொல்லுங்கள் என பதிலளித்தார்கள்.[82]

عَنِ ابْنِ عُمَرَ ﵄ أَنَّ النَّبِيَّ ﷺ كَانَ إِذَا جَلَسَ فِي الصَّلَاةِ وَضَعَ يَدَيْهِ عَلَىٰ رُكْبَتَيْهِ وَرَفَعَ إِصْبَعَهُ الْيُمْنَىٰ الَّتِي تَلِي الْإِبْهَامَ فَدَعَا بِهَا وَيَدَهُ الْيُسْرَىٰ عَلَىٰ رُكْبَتِهِ بَاسِطَهَا عَلَيْهَا

இப்னு உமர் ﵄ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள்

82. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 406. ஸஹீஹுல் புகாரி, எண் 3370.

தொழுகையில் (அத்தஹிய்யாத்) அமர்வில் உட்கார்ந்தால், தம் கைகளை முட்டுக்கால்கள் மீது வைப்பார்கள். பெருவிரலை அடுத்துள்ள வலக் கை(யின் சுட்டு) விரலை உயர்த்தி, அதைக் கொண்டு துஆ செய்வார்கள். (அதாவது, துஆவுடைய வாக்கியங்களை உச்சரிக்கும்போது சுட்டு விரலை மேல்நோக்கி உயர்த்தி அல்லாஹ்விடம் கேட்பது போன்று சைகைசெய்வார்கள்.) இடக் கையை இடது கால் மூட்டின் மீது விரித்து வைத்திருப்பார்கள்.[83]

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللهِ ﷺ كَانَ إِذَا قَعَدَ فِي التَّشَهُّدِ وَضَعَ يَدَهُ الْيُسْرَىٰ عَلَىٰ رُكْبَتِهِ الْيُسْرَىٰ وَوَضَعَ يَدَهُ الْيُمْنَىٰ عَلَىٰ رُكْبَتِهِ الْيُمْنَىٰ وَعَقَدَ ثَلَاثَةً وَخَمْسِينَ وَأَشَارَ بِالسَّبَّابَةِ

இப்னு உமர் رَضِيَ اللهُ عَنْهُمَا அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் அத்தஹிய்யாத் அமர்வில் உட்கார்ந்தால் தமது இடக்கையை இடது கால் மூட்டின் மீதும் வலக்கையை வலது கால் மூட்டின் மீதும் வைப்பார்கள். (அரபியர் வழக்கில்) ஐம்பத்து மூன்று என எண்ணுவதைப் போன்று வைப்பார்கள். (அதாவது, சிறு விரல், மோதிர விரல், நடு விரல் ஆகிய மூன்று விரல்களையும் உள்ளங்கையுடன் சேர்த்து வைப்பார்கள்.) மேலும், சுட்டு விரலால் சைகை செய்வார்கள்.[84]

19. اَلْقِيَامُ إِلَى الرَّكْعَةِ الثَّالِثَةِ மூன்றாவது ரக்அத்திற்காக எழுதல்

பின்பு தொழுபவர் பூமியின் மீது கைகளை ஊன்றியவாறு மூன்றாவது ரக்அத்திற்காக எழுவார். மேலே நேராக வரும்போது தனது இரு கைகளையும் தனது தோள்புஜத்திற்கு நேராக அல்லது காதுகளுக்கு நேராக அல்லாஹு அக்பர் கூறியவாறு உயர்த்துவார்.

மாவு குழைப்பதைப் போன்று இரு கைவிரல்களையும் மடக்கிக்

83. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 580.
84. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 580.

கொண்டு எழுவதற்கு ஆதாரப்பூர்வமான நபிமொழி ஏதும் இல்லை என்பதை முன்பே குறிப்பிட்டு இருக்கின்றோம்.

முதல் ரக்அத்தில் செய்த செயல்களைப் போலவே மூன்றாவது மற்றும் நான்காவது ரக்அத்திலும் செய்வார்.

ஃபர்ழான தொழுகையாக இருந்தால், நிலையில் சூரா அல் ஃபாதிஹா ஓதியப் பின் குர்ஆனிலிருந்து வேறு எதையும் ஓதமாட்டார்.

20. اَلتَّشَهُّدُ الْأَخِيْرُ கடைசி தஷஹ்ஹுத் இருப்பு

பிறகு, தொழுபவர் மூன்று ரக்அத்கள் உடைய தொழுகையை தொழுதால் மூன்றாவது ரக்அத்தை முடித்த பின்பு அல்லது நான்கு ரக்அத்கள் உடைய தொழுகையாக இருந்தால் நான்காவது ரக்அத்தை முடித்த பின்பு கடைசி தஷஹ்ஹுதுடைய இருப்பிற்காக உட்காருவார்.

பின்வரும் இருக்கை முறைகளில் ஏதேனும் ஒரு முறையில் உட்காருவார்.

முதல் முறை:

வலது காலை நட்டு வைத்து இடது காலை விரித்து வைத்து, அதன்மீது உட்காருவார்.



கடைசி தஷஹ்ஹுதில் உட்காரும் முதல் முறை

இரண்டாவது முறை:

வலது காலை நட்டு வைத்து, இடது காலை வலது காலின் தொடை மற்றும் முன்னங்காலுக்கு கீழே வெளிப்படுத்தி தனது பித்தட்டை பூமியின் மீது வைத்து உட்காருவார்.



கடைசி தஷஹ்ஹுதில் உட்காரும் இரண்டாவது முறை

மூன்றாவது முறை:

பித்தட்டை பூமியின் மீது வைத்து இரு கால்களையும் வலது பக்கமாக வெளிப்படுத்தி (நீட்டி வைத்து) உட்காருவார்.



கடைசி தஷஹ்ஹுதில் உட்காரும் மூன்றாவது முறை

பிறகு, தொழுபவர் முதல் தஷஹ்ஹுதுடைய இருப்பில் செய்ததைப் போலவே செய்வார் மேலும் அதில் ஓத வேண்டியவற்றை ஓதுவார்.

ஆதாரம்:

فَقَالَ أَبُو حُمَيْدٍ السَّاعِدِيُّ ﵁ أَنَا كُنْتُ أَحْفَظَكُمْ لِصَلاَةِ رَسُولِ اللهِ ﷺ وَإِذَا جَلَسَ فِي الرَّكْعَةِ الآخِرَةِ قَدَّمَ رِجْلَهُ الْيُسْرَىٰ وَنَصَبَ الأُخْرَىٰ وَقَعَدَ عَلَىٰ مَقْعَدَتِهِ

அபூ ஹுமைத் அஸ்ஸாயிதீ ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் தொழுகை பற்றி உங்களில் நான் மிகவும் மனனம் செய்து வைத்துள்ளேன். கடைசி ரக்அத்தில் உட்காரும்போது தமது இடது காலை (வலப் புறமாக) முற்படுத்தி, வலது காலை நட்டு வைத்துத் தம் இருப்பிடத்தின் மீது உட்கார்வார்கள்.[85]

عَنْ عَبْدِ اللهِ بْنِ الزُّبَيْرِ ﵁ عَنْ أَبِيهِ ﵁ قَالَ كَانَ رَسُولُ اللهِ ﷺ إِذَا قَعَدَ فِي الصَّلَاةِ جَعَلَ قَدَمَهُ الْيُسْرَىٰ بَيْنَ فَخِذِهِ وَسَاقِهِ وَفَرَشَ قَدَمَهُ الْيُمْنَىٰ

அப்துல்லாஹ் இப்னு அஸ்ஸுபைர் ﵁ அவர்கள் தன் தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தொழுகையில் (அத்தஹிய்யாத் அமர்வில்) உட்காரும்போது தமது இடது பாதத்தை தமது (வலது) தொடைக்கும் முன்னங்காலுக்கும் இடையே (அவற்றுக்குக் கீழே) வைத்து, தனது வலது பாதத்தை விரித்து வைப்பார்கள்.[86]

فَقَالَ أَبُو حُمَيْدٍ السَّاعِدِيُّ ﵁ أَنَا كُنْتُ أَحْفَظَكُمْ لِصَلاَةِ رَسُولِ اللهِ ﷺ

85. ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி, எண் 828.

86. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 579.

DARUL HUDA

فَإِذَا كَانَ فِي الرَّابِعَةِ أَفْضَىٰ بِوَرِكِهِ الْيُسْرَىٰ إِلَى الْأَرْضِ وَأَخْرَجَ قَدَمَيْهِ مِنْ نَاحِيَةٍ وَاحِدَةٍ

அபூ ஹுமைத் அஸ்ஸாயிதீ ﵁ கூறுகிறார்கள்: நபி ﷺ அவர்களின் தொழுகை பற்றி உங்களில் நான் மிகவும் மனனம் செய்து வைத்துள்ளேன். அவர்கள் நான்காவது ரக்அத்தில் உட்காரும் போது தமது இடது பித்தட்டை தரையில் வைப்பார்கள். தமது இரு பாதங்களையும் ஒரு பகுதியிலேயே வெளிப்படுத்தி வைப்பார்கள்.[87]

21. اَلْاِسْتِعَاذَةُ مِنَ الْأَرْبَعِ நான்கை விட்டும் பாதுகாப்புத் தேடுதல்

தொழுபவர் கடைசி தஷஹ்ஹுதை(யும் ஸலவாத்தையும்) ஓதியப் பின் நான்கை விட்டுப் பாதுகாப்புத் தேடுவார். அவை: 1. நரக வேதனை, 2. மண்ணறை வேதனை, 3. வாழ்வு மற்றும் மரணத்தில் ஏற்படும் குழப்பம், 4. தஜ்ஜாலுடைய குழப்பம்.

தொழுபவர் இந்த நான்கை விட்டும் பாதுகாப்புத் தேடிய பின்பு அவர் விரும்பிய துஆவை கேட்பது விரும்பத்தக்க செயலாகும்.

ஆதாரம்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِذَا تَشَهَّدَ أَحَدُكُمْ فَلْيَسْتَعِذْ بِاللهِ مِنْ أَرْبَعٍ يَقُولُ اَللّٰهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ جَهَنَّمَ وَمِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَمِنْ شَرِّ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ

அபூ ஹுரைரா ﵁ அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் (தொழுகையின் இறுதி அமர்வில்) தஷஹ்ஹுத் ஓதும்போது நான்கிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடட்டும். (அவை:)

87. ஆதாரம்: அபூ தாவூது, எண் 731.

اَللّٰهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ جَهَنَّمَ وَمِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَمِنْ شَرِّ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ

உச்சரிப்பு: அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மின் அதாபி ஜஹன்னம, வ மின் அதாபில் கப்ரி, வ மின் ஃபித்னத்தில் மஹ்யா வல் மமாத்தி, வ மின் ஷர்ரி ஃபித்னத்தில் மஸீஹித் தஜ்ஜால்.

பொருள்: இறைவா, உன்னிடம் நான் நரகத்தின் வேதனையிலிருந்தும், மண்ணறையின் வேதனையிலிருந்தும், வாழ்வு மற்றும் மரணத்தின் சோதனையிலிருந்தும், மஸீஹுத் தஜ்ஜால் உடைய குழப்பத்தின் தீங்கிலிருந்தும் பாதுகாப்புத் தேடுகிறேன்.[88]

22. اَلتَّسْلِيْمُ ஸலாம் கொடுத்தல்

தொழுபவர் தஷஹ்ஹுத், நான்கை விட்டுப் பாதுகாப்புத் தேடுதல் மற்றும் துஆ செய்தல் ஆகியவற்றிற்குப்பின் ஸலாம் கொடுப்பார்.

முதலில் வலது பக்கமும் பிறகு இடது பக்கமும் ஸலாம் கொடுப்பார்.



வலது பக்கம் ஸலாம் கொடுக்கும் முறை

88. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம், எண் 558.



இடது பக்கம் ஸலாம் கொடுக்கும் முறை

இரண்டு ஸலாமிற்கும் இடையில் தலையை குனிவதற்கோ அல்லது நெஞ்சில் ஊதுவதற்கோ எந்த ஆதாரமும் இல்லை.

தொழுபவர் இரு பக்கமும் ஸலாம் கொடுக்கும் போது

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் என்று கூறுவார்.

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹ் என்று கூறுவதற்கும் ஆதாரம் உண்டு.

ஆதாரம்:

عَنْ عَبْدِ اللّٰهِ بِنِ مَسْعُوْدٍ رضي الله عنه أَنَّ النَّبِيَّ ﷺ كَانَ يُسَلِّمُ عَنْ يَمِينِهِ وَعَنْ

شِمَالِهِ حَتَّىٰ يُرَىٰ بَيَاضُ خَدِّهِ السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ﷺ அவர்கள் தங்களது கன்னத்தின் வெண்மை (பின்னால் அமர்ந்திருப்பவர்களால்) பார்க்கப்படுகின்ற அளவிற்கு வலது பக்கம் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் என்றும், இடது பக்கம் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் என்றும் ஸலாம் கொடுப்பவர்களாக இருந்தார்கள்.[89]

عَنْ عَلْقَمَةَ بْنِ وَائِلٍ عَنْ أَبِيهِ ﷺ قَالَ صَلَّيْتُ مَعَ النَّبِيِّ ﷺ فَكَانَ يُسَلِّمُ عَنْ يَمِينِهِ السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ وَعَنْ شِمَالِهِ السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ

அல்கமா இப்னு வாயில் தனது தந்தை வாயில் ﷺ அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்: நான் நபி ﷺ அவர்களுடன் தொழுதேன். நபி ﷺ அவர்கள் தங்களது வலது பக்கத்தில் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹ் என்று கூறி ஸலாம் கொடுப்பார்கள். மேலும், தனது இடப்பக்கம் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹ் என்று கூறி ஸலாம் கொடுப்பார்கள் என்று வாயில் ﷺ அவர்கள் கூறினார்கள்.[90]

----

89. ஆதாரம்: அபூ தாவூது, எண் 996.
90. ஆதாரம்: அபூ தாவூது, எண் 997.

DARUL HUDA

Quality Islamic Book Publishers

மிகவும் நேர்த்தியான முறையில் அச்சடிக்கப்பட்ட குர்ஆன் பிரதிகள் மற்றும் ஆதாரப்பூர்வமான தரமிக்க இஸ்லாமிய நூல்கள்.

Bank Account Details

Indian Bank

A/c Name: **DARUL HUDA**, Current A/c No. **6724227449**,
Branch: Mannady, IFS Code: IDIB000M016

அல்குர்ஆன்

3. அல்குர்ஆன் அரபி (Executive Hard bound, Paper 40gsm, Size 14x21cm)
4. அல்குர்ஆன் அரபி (Executive Hard bound, Paper 60gsm, Size 18x24cm)

அல்குர்ஆன் தமிழாக்கங்கள்

1. தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃஃபில் பயான் (Hard Bound 48 gsm)
2. தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃஃபில் பயான் (Hard Bound 60 gsm)
3. புகழ்மிகு குர்ஆன் போற்றத்தகு தமிழாக்கம் (Hard Bound)
4. மகத்துவமிகு குர்ஆன் மாண்புமிகு தமிழாக்கம் (Hard Bound)
5. தெளிவுமிகு குர்ஆன் தெவிட்டாத தமிழாக்கம் (HB 28 gsm, 18x12cm)
6. மேன்மைமிகு குர்ஆன் எளிமைமிகு தமிழாக்கம்
7. இறைவேதம் அல்குர்ஆன் தமிழாக்கம் (Soft Bound)
8. சங்கைமிகு குர்ஆன் சிறப்புமிகு தமிழாக்கம் (Hard bound)
9. கண்ணியமிகு குர்ஆன் இனிமைமிகு தமிழாக்கம் (Soft Bound)
10. உயர்வுமிகு குர்ஆன் உன்னத தமிழாக்கம் (Hard Bound 28 gsm)

11. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் - பாகம் 1
(அல் பாதிஹா (01) முதல் அத் தவ்பா (9) வரை)

12. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் - பாகம் 2
(சூரா யூனுஸ் (10) முதல் அல் அன்கபூத் (29) வரை)

13. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் பாகம் 3
(சூரா அர்ரூம் (30) முதல் அந்நாஸ் (114) வரை)

14. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (அம்ம ஜுஸ்வு)

15. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (ஆலு இம்ரான்)

தமிழ் புத்தகங்கள்

1. தொழுகை முறை
2. நோன்பு
3. ஹிஜாப் - முஸ்லிம் மங்கையரின் மேன்மை
4. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கொள்கைகள்
5. அழைப்புப்பணி - அழைப்பாளர்
6. திருமண வாழ்த்து, காலை மாலை திக்ருகள், இஸ்திகாரா துஆ
7. ஸகாத் - வழிமுறைகள், சட்டதிட்டங்கள்
8. இறுதிப் பேருரை (முழுத் தொகுப்பு)
9. இஸ்லாமியக் கொள்கை. வினா - விடைகள்
10. தடுக்கப்பட்டவை
11. இறைநெறி கூறும் இயற்கைக் கடமைகள்
12. அல்குர்ஆன் துஆக்கள்
13. குர்ஆன் ஹதீஸ் கூறும் பிரார்த்தனை
14. நம்பிக்கையின் அடிப்படைகள்
15. இல்லங்களை அச்சுறுத்தும் அபாயங்கள்
16. இஸ்லாமிய ஒளியில் குழந்தை வளர்ப்பு
17. மூன்று அடிப்படைகள்
18. அலட்சியமாகக் கருதப்படும் ஆபத்தான குற்றங்கள்
19. தஃலீமுல் குர்ஆன் (தஜ்வீது வழிகாட்டி)
20. அத்தவ்ஹீத்
21. அன்றாடம் கடைப்பிடிக்க 1000 சுன்னத்துகள்
22. வெற்றிக்கு வழி
23. அழைப்புப் பணி கேள்வி-பதில்
24. உம்ரா வழிகாட்டி (ஆர்ட் பேப்பர் 18x12 cm)
25. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (10.5x14 cm)

26. முன்மாதிரி முஸ்லிம் குடும்பம்
27. இயற்கை மதம்
28. ஹிஸ்னுல் முஸ்லிம் (மஸ்னூன் துஆக்கள்)
29. இஸ்லாமின் இறைக்கோட்பாடு
30. மீளாப்பயணம் (ஜனாஸாவின் சட்டங்கள்)
31. இப்னு தைமிய்யா வாழ்க்கை வரலாறு
32. முன்மாதிரி முஸ்லிம்
33. ஹிஸ்னுல் முஸ்லிம் (21x14 cm)
34. ஹஜ். உம்ரா வழிகாட்டி
35. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (21x14 cm Single Colour)
36. தப்சீர் முதல் ஜூஸ்வு
37. முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி
38. அர்ரஹீக் அல்மக்தூம் (18x24 cm)
39. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (14x21 cm Full Colour)
40. இறைமார்க்கம் இறைவேதம் ஓர் அறிமுகம்
41. இஸ்லாம் நீங்கள் அறியவேண்டிய மார்க்கம்
42. சான்றோர்கள் பாடசாலை (பாகம் 1)
43. இறைவனுக்கு உருவம் கொடுக்க முடியுமா?
44. கவலைப்படாதே!
45. இயேசுவின் அழைப்பு
46. ஒரு தெய்வமா? பல தெய்வமா?
47. வஸிய்யத்தீ
48. ரஹ்மத்தான ரமழான்
49. இஸ்லாமிய சிறப்பு கல்வி வகுப்பு
50. உலக முடிவு
51. இறைத்தூதரின் தூய வரலாறு
52. அல்குர்ஆன் பாக்கியம் நிறைந்த வேதம்
53. தூய திருகலிமா
54. அத்தஹாரா - தூய்மை - ஃபிக்ஹ்
55. தொழுகை - ஃபிக்ஹ்
56. ஸகாத் - ஃபிக்ஹ்
57. ஹஜ் - ஃபிக்ஹ்
58. நோன்பு - ஃபிக்ஹ்
59. இல்முத் தஜ்வீத்
60. இஸ்லாமில் சொத்துரிமை சட்டங்கள்

திறமைமிக்க மார்க்க அறிஞர்கள் தொகுத்த சட்ட நூல்கள்



எல்லோரும் அறிய வேண்டிய மார்க்க சட்டங்கள்

சரியான ஆதாரங்கள்

எளிய நடை.

இல்லங்கள், மஸ்ஜிகள் மற்றும் மத்ரஸாக்களில் இருக்கவேண்டிய தொகுப்பு.

அல்ஹம்து லில்லாஹ்!
படியுங்கள்! பரப்புங்கள்!!

BOOK SIZE: H 21.5 X W 15 CM | 70 GSM PAPER | 5 VOLUMES | 668 PAGES | 44 CHAPTERS

DARUL HUDA
Quality Islamic Book Publisher
211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-1.
Phone : +91-44-25247866, | darulhuda.chennai@gmail.com
Mobile : +91-98401 74121 | www.darulhuda.net
DH-TML 2062